உ

திருவாசக வேதாசல விரிவுரை மறுப்பு.

எச்சரிக்கை!

ஏமாந்து போகாதீர்கள்!

இது

சிதம்பரம் பாலாம்பிகாவிலாஸபிரஸ்

,, விநாயகசுந்தரவிலாஸபிரஸ்

கும்பகோணம் சாரதாவிலாஸபிரஸ், மூன்றிலும்

அச்சிற் பதிப்பிக்கப்பட்டது.

டைட்டல்

சிதம்பரம் சண்முகசுந்தரவிலாசம் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

1922

2? DEC 1986

விஞ்ஞாபனம்.

இந்த "எச்சரிக்கை"ப் பத்திரம் திருச்சங்கர்கம்பெனிவேதாசலத்திருவாசகவிரிவுரை நோட்டீசுக்குக் கண்டனமாய், இனிவரும் அத்திருவாசகவிரிவுரைவித்தாமறுப்புக்குக் கஜகண்டாகோஷ (ஆனைவரும் பின்னே மணியோசைவரும் முன்னே) நியாயத்தால் சூசகமாகிய சுருக்கமறுப்பாயெழுந்தது. அதனின், இதன்கீழ் அந்த நோட்டிஸ் வெளியிடப்பட்டிருக்கின்றது.

அது

பூசைக்குரியநூல் வெளிவந்துவிட்டது! தெய்வஅருள் நூல் வெளிவந்துவிட்டது!

செந்தமிழ்க் களஞ்சியம்

தொகுதி—க

திருவாசக விரிவுரை

முதற்பாகம்

இதன்கண் திருவாசகத் திருமறையில் முதல் நான்கு திருவகவல்களுக்குப் பல்லவபுரம் பொதுநிலைக்கழக ஆசிரியர், சுவாமி வேதாசலம் என்னும் மறைமலையடிகள் பிறமொழிச் சொற்கள் பெரும்பாலுங்கலவாமல்திருத்தமான இனியதனித்தமிழ்நடையில் இயற்றிய விரிவுரை முற்றுப்பெற்றது. இத்துடன்திருவகவல்கள் நான்கின் மூலங்களுந் தனியாக அச்சிட்டுச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவற்றுடன்ஸ்ரீநடராசப்பெருமான், சிவகாமியம்மையார், மாணிக்கவாசகர் மூவரும் ஒருங்கே யமைந்த திருவுருவப்படம் ஒன்றுஞ் சேர்க்கப்பட்டுள்ளது.

பொன்னெழுத்திட்ட உயர்ந்த கலிக்காகக்கட்டிடஞ்செய்யப்பட்டுள்ளது. விலை ரூ. 5 பட்டுக் கட்டிடம் ரூ. 6

குறிப்பு:—திருவாசக விரிவுரை முதற்பாகத்தில் கையொப்ப நண்பர்கட்கு அனுப்பியது போக சொற்பப் பிரதிகளே எஞ்சியுள்ளன. ஆதலால், இதனைவாங்கவிரும்புவோர் விரைவில் எழுதிப் பெற்றுக்கொள்ளல்வேண்டும்.

மதிப்புரை

நவசக்தி பத்திரிகாசிரியர்

ஸ்ரீமான் திரு. வி. கல்யாணசுந்தரமுதலியார் எழுதியது.

மாணிக்கவாசகர் அருளிச்செய்த திருவாசகத்தின் மாண்பு அறியாத தமிழர் இரார். திருவாசகத்தைச் சமய நூலாகவும், சிறந்த தமிழ் இலக்கியமாகவும் போற்றலாம். தமிழ் நாடு உலகத்துக்கு உதவிய சீரிய நூல்களுள் திருவாசகமுமொன்று. திருவாசகத்தை ஓதுவார் உள்ளத்தில் அன்பென்னும் ஆரா அமுதம் பொங்கி வழிந்து கொண்டேயிருக்கும், கடவுள்

உண்மையை மறுப்போர் இருப்பு மனத்தையும் கனியச்செய்யும் ஆற்றல் திருவாசகத்துக்கு உண்டு என்று கூறுவது மிகையாகாது.

இன்னோரன்ன சிறப்புவாய்ந்த இந்நூலைப் பொருள் தெரிந்து ஓதுவார் இந்நாளில் அரியராயினார். தமிழ் வளம் அருகியுள்ள இக்காலத்தில் திருவாசகமூலம் பல்லோர்க்குப்பயன் படுதல் அருமை. கால நிலை யுன்னி ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்களைக்கொண்டு திருவாசகத்துக்கு விரிவுரை எழுதுவித்து, அதை மூலத்தோடு பகுதி பகுதியாக வெளியிட்டு வரும் ஸ்ரீமான் திருவரங்கம் பிள்ளை அவர்களுக்குத்தமிழுலகம் கடமைப் படுதல் வேண்டும்.

இப்பொழுது திருவாசகத்துக்கு விரிவுரை கண்டு வரும் ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்களைத் தமிழ்நாடு நன்கு அறியும். சுவாமிகளின் தமிழ்ப்புலமையை அளந்துகூற நாம் அருகரல்லோம். சுவாமிகளுக்கு வடமொழிப் புலமையுண்டு. சுமார் ஐயாயிரம் ரூபா பெறத்தக்க ஆங்கில நூல்களின் சாரம் சுவாமிகள் உள்ளத்தில் பரிணமித்திருக்கிறது. பலதிற ஆங்கிலக் கலைநூல்களை சுவாமிகள் ஆராய்ந்திருக்கிறார்கள். இத்துணைக் கலைப்புலமை நிரம்பப்பெற்றுள்ள ஒருவரால் எழுதப்பட்டு வருஉம் உரையின் பெற்றியை விரித்துக் கூறவேண்டுவது அநாவசியம்.

திருவாசக விரிவுரையிலுள்ள தத்துவநுட்பமும், பொருளாழமும், இலக்கணக் குறிப்பும், உரை நடை வனப்பும், புலவர்களை மகிழ்விக்கும் தமிழ்ப் புலமையோடு மேல்நாட்டுப் புலமையுமுடைய ஒருவர் உயரிய ஒரு தமிழ்நூலுக்குவிரிவுரை காணப்புகுந்தது—இதுவே-முதன்முறையாகும். ஆதலால் இவ்வுரையை ஆங்கிலங்கற்றநும், தமிழ்பயின்றநும், தத்துவ ஞான ஆராய்ச்சி யுடையாரும், இலக்கியப் புலவரும், இலக்கணஅறிஞரும், செந்தமிழ்க் காதலுடையமாணக்கரும், பிறநும் வாங்கி வாசித்துத் திருவாசக இன்பத்தை நுகர்வாராக. இத்தகைய உரையை உலகத்துக்கு உதவி வரும் சுவாமிகளுக்கு எமது வணக்கத்தைச் செலுத்துகிறோம்.

"திருவாசகத்துக்கு உருகாதார்—ஒரு வாசகத்துக்கு முருகார்".

என்பதாம்.

இந்த நோட்டீஸைப்பார்த்துக்கொண்டு அதன்மேல் அதனை மறுத்த இவ்வெச்சரிக்கைப்பத்திரத்தை வாசிக்கக்கடவர்கள்.

பிழைதிருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
7	19	ண்சமண்கையரை	ணொடுதேரரை
8	13	செய்பு	செய்யு
10	16	பூமியின்றும்	பூமியினின்றும்
14	18	விண்ணாய்	விண்ணாய்ப்
15	7	காயகல்ப்பம்	காயகற்பம்
16	8	காயகல்ப்ப	காயகற்ப
20	24	சுற்றிக்	சுற்றிச்
27	22	மாட்டெடந்து	மாட்டெடிந்து
28	20	நந்திகேசுராது	நந்திகேசுரரது
34	30	குறிய	குரிய
	31	குறிய	குரிய
35	10	பறந்துதி	பறந்துதிரி

ஸ்ரீ குஞ்சிதசரண பிரஸ், சிதம்பரம்.

உ

சிவமயம்.

எச்சரிக்கை.

சைவ சமயிகளே! ஏமாந்து போகாதீர்கள்!!

“பூசைக்குரிய நூல் வெளிவந்து விட்டது.”

என்று ஒருபாலும்

“தெய்வ அருள் நூல் வெளிவந்து விட்டது.”

என்று மற்றொருபாலுமாக

நாணின்மை அச்சமின்மை இரண்டு சிறகுகள் படைத்துச்

“செந்தமிழ்க் களஞ்சியம்.

தொகுதி—க.

திருவாசக விரிவுரை முதற்பாகம்.”

என்று நடுவுடல் படைத்துக் கீழ்விஷபங் தன்காலிற்றொங்கக்கட்டிய ஓர் நோட்டீஸ்ப் பொல்லா வல்லூறு பறந்து திரிவது பார்த்தீர்களா?

வேதாசலம் செய்த திருவாசக விரிவுரை என்பது விஷங் கலந்தசோறு, சேறுகலந்த பாலே பிறிதில்லை, இதில் ஏமாந்து போகாதீர்கள். சைவசமயிகளே!! இத் திருவாசக விரிவுரையென்பது உண்மையில் திருவாசகத்தை விரிக்கவந்த திருவாசக விரிவுரைதானா? அல்லது அது வகாரஉடம்படு மெய்போய்த் திருவாசகத்தை இரிக்கவந்த திருவாசக இரிவுரைதானா? என்பதை உற்று நோக்குங்கள். இத் திருவாசக இரிவுரை செந்தமிழ்த் தெய்வத் திருமறையாகிய திருவாசகத்தைக் குடிகெடுத்து மோசம்பண்ணச்செய்த மோசஉரையாய், அதன் ஆசிரியர் மாணிக்கவாசகர்

தமது அத்திருவாசகத்தா லுச்சிமேற்கொண்டு மெச்சிய வேதாக மத்தை நாசம்பண்ணச்செய்த நாசஉரையாய், அத்திருவாசகமும் வேதாகமமும் சம்மதித்த வைதிக சைவ சித்தாந்தத்தைச் சைவ சமயிகளுக்கு உள்ளபடியாக வொட்டாது திரிவு படுத்தவந்த ஆபாசஉரையாய் இம்முத்திறத்துமோச நாச ஆபாச உரையோ அன்றோ என்பதைக் கண்திறந்து பாருங்கள்.

இது அவ்வித மோச நாச ஆபாச உரையென்பதற்குத்தாலீ புலாக (ஒரு பானைசோற்றுக் கோரரிசி பதம்பார்த்த) நியாயமாக ஒன்று காட்டுகின்றோம். கண்விழித்துப் பாருங்கள்.

முதலில் நமது வைதிக சைவசமயத்துக்குச் சிறந்த ஆதார மாகிய பிரமாணம் அநாதி தொடுத்து இதுவரை வழங்கிவந்த சாஸ்திர குரு மஹாஜன சற்சம்பிரதாயப்படி வேதாகமமோ! அன்றோ!! ஏனை வைதிக சைவ நூல்களெல்லாம் தாம் அவ் வேதாகம வழிவந்த நூல்களென்பதை அந்நூல்கள் தாமே வாய் திறந்து சொல்கின்றனவோ; அன்றோ! அவற்றுள் முதன்மை படைத்த நமது ஞானநுபவ நவநீதப் பெருஞ்செல்வம் திருவாசக மாகிய நமது செந்தமிழ்த் தெய்வத் திருமறையோ!! அன்றோ!!

அதனைச் செய்த மாணிக்கவாசகரையும், அத்திருவாசகத் தையும் இவ் வேதாசலமும், இவரது திருவாசக இரிவுரையும் புரட்டுகிற முழுப்புரட்டாகிய மோசத்தைச் சைவ சமயிகளே! பாருங்கள்.

மாணிக்கவாசகர் தமது திருவாசகத்தில் வேதாகமத்தைப் பற்றி என்ன என்ன சொல்கின்றாரோ அவர் சொன்னதையெல் லாம் இவ் வேதாசலம் எத்தனை எத்தனை விதமாகப் புரட்டுகின் றார். பாருங்கள்!!

நீத்தல் விண்ணப்பத்தில்,

"மிக்க வேத மெய்ந்நூல்—சொன்னவனே சொற் கழிந்த வனே கழியாத் தொழும்பர் முன்னவனே பின்னு மானவனே யிம் முழுதையுமே"

என்றதனால் வேதத்தைச் சொன்ன ஆக்கியோன் பரமசிவ னென்பதும்

கீர்த்தித் திருவகவலில்,

"மன்னு மாமலை மகேந்திரமதனிற்
சொன்ன வாகமந் தோற்றுவித்தருளியும்"

என்றதனால் ஆகமத்தை முன்சொன்ன ஆக்கியோனும் மீட்டு மதனை மகேந்திரமலையில் தோற்றுவித்தருளிய ஆக்கியோனும் பரமசிவ னென்பதும்

"கேவேடராகிக் கெளிறது படுத்து
மாவேட்டாகிய வாகமம் வாங்கியும்
மற்றவை தம்மை மகேந்திரத்திருந்
துற்றவைம் முகங்களாற் பணித்தருளியும்"

என்றதனால் கடலிற்புக்க ஆகமநூலை மீட்டருளியவனும் அதனைத் தனது ;சதாசிவவடிவத்தின் ஐம்முகங்களாற் பணித் தருளியவனும் பரமசிவனென்பதும்

சிவ புராணத்தில்

"ஆகம மாகிநின் றண்ணிப்பான் றாழ்வாழ்க"

என்றதனால் தன்னை உயிர்களும் உயிர்களைத் தானும் அண்ணிக்கும்பொருட்டு ஆகமந் தானாய்நிற்பவன் சிவனென்பதும்

திருச்சதகத்தில்,

"பாவுவா ரிமையோர்கள் பாடுவன நால்வேதம்"

என்றதனால் பரமசிவன் பாடுவன நால்வேத மென்பதும்

,,ஆயநான் மறைபவனு நீயே யாத
லறிந்து யான் யாவரினுங் கடையனுப
நாயினே னுதலையு நோக்கிக் கண்டு
நாதனே நானுனக்கோ ரன்ப னென்பே
னாயினே னுதலா லாண்டு கொண்டா
யடியார்தா மில்லையே யன்றி மற்றோர்
பேயனே னிதுதானென் பெருமை யன்றே
யெம்பெருமா னென்சொல்லிப் பேசுகேனே"

என்றதனால் நான்மறைக் குரியவன் பரமசிவனென அவனுக்கு மிக்க உயர்வையும் அவனது மிக்க உயர்வின் வைத்துத் தனக்கு மிக்க இழிவையுங் கிளந்துரைத்து அத்தனைக்கத்தனை உயர்வுபடைத்தது நான்மறை என்பதும்

திருவெம்பாவையில்

"விண்ணுக்கொருமருந்தை வேத விழுப்பொருளை"

என்றதனால் வேதத்திற் கூறப்படும் ஏனைத் தேவர்களாகிய மற்றைப் பொருள்களையெல்லாம் பரமசிவனது பாகிய விபூதிகளாகிய பருப்பொருள்களெனக் கழித்து மற்றுப்பாகிய அந்தர சொரூப விபூதிமானும் மஹாதேவனாகிய வேதவிழுப்பொருள் பரமசிவனென்பதும்

"பேதையொருபாற் றிருமேனி யொன்றல்லன்
வேதமுதல் விண்ணோரு மண்ணுந் துதித்தாலும்"

என்றதனால் வேதம் முளைத்த மூலமுதற்பொருள் பரமசிவனென்பதும்

திருவம்மானையில்,

"துண்டப் பிறையான் மறையான் பெருந்துறையான்"

என்றதனால் வேதமுதல்வன் பரமசிவனென்பதும்

"பெற்றி பெறற்கரிய பெம்மான் பெருந்துறையான்
கொற்றக் குதிரையின்மேல் வந்தருளித் தன்னடியார்
குற்றங்க ணீக்கிக் குணங்கொண்டு கோதாட்டி"

என்றதனால் சுதையை அநுசரித்துப் பரமசிவனுக்குக் குதிரைவேத மென்பதும்

திருப்பொற் சுண்ணத்தில்

"வேதமும் வேள்வியு மாயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையு மாயினார்க்கு"

என்றதனால் பரமசிவனுக்கு எல்லாமாந் தன்மையாய் அகிருத்திரிமமாகிய ஸர்வான்மகத்தன்மையுள் வைத்து வேதமும் வேள்வியுமாயினர் சிவனென்பதும்

திருச்சாழலில்,

"பேசுவதுந்திருவாயான் மறைபோலுங் காணேடீ"

என்றதனால் பரமசிவன் வாய்திறந்து பேசுவதெல்லாம் வேதமென்பதும்

"நன்றாக நால்வர்க்கு நான்மறையி னுட்பொருளை
யன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தான் காணேடீ"

என்றதனால் பரமசிவன் சநகன்முதலிய பிரமபுத்திரர்கள் நால்வர்க்கு முட்பொருளை உபதேசித்தற்கு அதனை உட்கொண்டு நின்ற மூலம் நான்மறையேயாக அந்நான்மறையி னுட்பொருளை உபதேசித்தவன் பரமசிவன் என்பதும்

திருப்பூவல்லியில்

"அன்றாலி னீழற்கீ ழருமறைக டானருளி
நன்றாக வானவர் மாமுனிவர் நாடோறும்
நின்றார வேத்தநிறைகழலோன்"

என்றதனால் தனது நிறைகழலை வானவரும், மாமுனிவரும் நாடோறும் நின்று நிறைய நன்றாக ஏத்த அன்று ஆலநீழலின் கீழிருந்து வேதங்களை அருளிச்செய்தவன் பரமசிவன் என்பதும்

அன்னைப்பத்தில்

"வேதமொழியர் வெண்ணீற்றர் செம்மேனியர்"

என்றதனால் பரமசிவன் பேசும் மொழியெல்லாம் வேதமென்பதும்

அருட்பத்தில்

"திமிலநான்மறைசேர் திருப்பெருந்துறையில்"

என்றும்

"செப்ப மாமறைசேர் திருப்பெருந்துறையில்"

என்றும்

"தெருளுநான்மறைசேர் திருப்பெருந்துறையில்"

என்றும்

கூறியவதனால் நான்மறை சேர்தல்பற்றிய பெருமையை யுடையது திருப்பெருந்துறை என்பதும்

திருவேசறவில்

"முடிவில்லா வோத்தானே பொருளானே"

என்றதனால் நித்தியவாணியாகிய வேதவடிவினனும் பொருள்வடிவினனுமிருப்பவன் பரமசிவன் என்பதுமாக இன்னன பல்லாறுகளால் வேதாகமவரலாற்றை மாணிக்கவாசகர் கண்டரவமாய் வாய்திறந்து சொல்வாராய் எத்திசையுமொத் தொலிக்க முரசறைகின்றாரோ! அன்றோ!!

இங்கே இதுவரை காட்டிவந்த திருவாசகவசனங்களாற் போந்த பயனென்னையெனின், பரமமுதனூலாகிய வேதாகமத்தைச் செய்த ஆக்கியோன் பசுபதியும் நிரதிசயஸர்வஞ்ஞனும் அதிபரமாப்தனுமாகிய பரமசிவனே ஏனைப்பசுக்களாகிய சிவன்களுமல்லர், ருத்திரர்களுமல்லர், சுரருமல்லர், முனிவருமல்லர், என்னும் முழுவலி முழுக்கொள்கையினராய்த் தமது திருவாசகத்தில் வேதாகமவிரோதிகளுக்கெல்லாம் இடியேறுகச் செயபேரி கொட்டி அரங்குவகுத்துநிற்பவர் மாணிக்கவாசகரென்பது பயனாயிற்றன்றோ! அன்றோ!! அது அங்ஙனமானால் ஏழைபரிருகாற்பசுக்களாகிய மானிடர்கள் அப்பரமமுதனூலுக்கு ஆக்கியோர்களாவரென்னும் ஆசங்கைக்கு அணுத்துணையேனும் இடமெங்கே? அவ்வாசங்கை தூரம்போய்த் துச்சமாகாதோ! அவ்விபல்பினதோராசங்கையை மகனெனனப்பிறந்த எந்த அறிவுடையோன் எவனேனும் நினைப்பனே? பிறந்த அன்றைக்கே இறந்துபோவார்களென்னும் சீலத்தால் மர்த்தியர்களெனப்படும் இம்மாயாஉலகப்பேய் வாழ்க்கை மானிடமசகங்களா எத்தனைக்கெத்தனை அறிவுடையோர்களாய்த் தலைகீழாய்நின்று தவஞ்செய்தாலும் சாவாமூவாப் பழம்பொருளாகிய பரமசிவன் வகிக்கநின்ற அகண்ட அதீதார்த்த போதக வேதாகமகர்த்திருத்துவமென்னும் மலைப்பாரத்தைச் சுமந்திறக்கவல்லவர்கள்!!

மேலேகாட்டிய திருவாசகவசனங்களில் வேதாகமம் மானிடமக்கள் வாய்மொழியென்பதற்கு ஏதேனும் ஒருமணமாவது ஒரு பொசிவாவது ஒருசாயையாவது மாணிக்கவாசகர் காட்டியிருக்கின்றாரா? சைவசமயிகளே! திருவாசகத்தில் அரிப்பரித்துப் பாருங்கள்.

இஃதிங்ஙனமாக, வேதாசலம் தனது திருவாசக இரிவுரையில் கருடபங்கசம்ரம்பவிஷ்புசங்கரீபாயமாக வேதாகமம் மக்கள்வாய் மொழியென்று அதனைக்கிழிக்கிற கிழிக்குக் கணக்கில்லை. அதனுள்ளும் சிவாகமத்துக்காவது சைவர்களேயன்றி ஏனையோர் புறத்தாராவர்கள். வேதத்துக்கோ அங்ஙனமன்று. அது சைவர்களுளப்பட ஸ்மார்த்தர் வைணவர் மாத்துவர் முதலிய இன்னன திறத்தெல்லார்க்கும் அங்கீகாரமாகிய பொதுநூலாய்க் கீழுக்குக் கீழும் மேலுக்குமேலுமாகிய இருதிறத்து சோபானக்கிரமத்து நாநா அதிகாரிகளுக்கும் நாநாஉபாயங்களால் நாநாசித்திகளை வழங்கி வரும் பொறுமைபொறுத்த ஞானமாதாவே! அன்றோ!! அந்த வேதமாதா துஷ்டபுத்திரசிட்டமாதிருகாரியமாக இவ்வேதாசலத்தின்கையில் அகப்பட்டுக்கொண்டு படும்பாட்டுக்குக் கணக்கில்லை. இவர் தமது இரிவுரையில் நமது வேதமென்னும் ஞானமாதாவைச் சிவனினின்று கொண்டைப்பிடிபிடித்துக் கீழே இறக்கி அவளை மக்கள்வாய்மொழி என்று சந்தியில்விட்டுப் புத்தர் சமணர்கள் ஜைகோவர்கள் [ஜீகோவாவை வழிபடுங்கிறிஸ்தவர்கள்] மகமதியர்கள் தெருச்சிரிக்க அவளை அநாதையாகவைத்துஎழுதும் அவமானவசனங்களுக்குக் கணக்கில்லை,

"வேதவேள்வியை நிந்தனைசெய்துழலாதமில்லியமண்சமண் கையரை, வாதில்வென்றழிக்கத் திருவுள்ளமே"

என்று வேதவிரோதிகள் தோல்வியெய்திக் கழுவேற நமது வேதமாதாவுக்கு அந்நாள் ஓர் யோககாலம். இந்நாள் இவ்வண்ணம் பரிசு கெடுதற்கு இப்படியும் ஓர் காலம்.

"ஞானத்தின்றிருவுருவைநான்மறையின்றனித்துணையை"

என்னும் பெரியபுராண ஆராய்ச்சிமணி அபயஒலிசெய்கின்றது. வேதமாதாவுக்கு ஏதமொன்றுமில்லை அமைக.

இனி வேதாகமத்தை இவ்வேதாசலம் சிவனினின்று மிறக்கி எழுதிய அவமானப்பகுதில் ஓர்பகுதியை ஈண்டுக் காட்டுவாம்

பரபக்கம் அஃதாவது,

"இனி ஒருசாரார் 'ஆகமம்' வேதத்திற்குப் பிந்திய தென்றல் யாங்ஙனம்? அஃது அதற்கும் முன்னே கிருதயுகத்

தில் சிவபெருமானால் அருளிச்செய்யப்பட்டதன்றோ. அஃது இறைவனாலன்றி அறிவுடையோரால் இயற்றப்பட்ட தென்றல் வேதாகமங்களை ஆக்கியோன் சிவபெருமானே என்னும் திருவாக்குகளுக்கு மாறாய் முடியுமன்றோ வெனின்;

வேதங்கள் முன்னும் ஆகமங்கள் பின்னுமாக அறிவுடையோரால் இயற்றப்பட்டனவேயாம் என்பதனை உரையுள் விரிவாக விளக்கி இருக்கின்றோம், மீட்டும் அவற்றை இங்கு விரிக்க வேண்டுவதின்று. "எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்னுந் தெய்வப் புலமைத் திருவள்ளுவநாயனர் கட்டளையின்படி வெறு நம்பிக்கையாய் எழுதிவைத்தவைகளையும் சொல்லுவனவற்றையும் ஆராயாது நம்புதல் மேன்மேல் அறிவு விளங்குதற்கும் உண்மை காண்டற்கும் ஆகாதவாறு தடைசெய்புமாகலின் எவற்றையும் ஆராய்ந்து அவ்வாராய்ச்சி முடிவில் உண்மையெனப் பெறப்பட்டதனைத் தழுவுதலே அறிவுடைமைக்கு அழகாம். ஆதலால் வேதம் ஆகமம்என்னும் இரண்டையும் பற்றி யாம் ஆராய்ந்துகூறியவற்றை நடுவு நிலைமையோடு படித்துப்பார்த்து அவற்றிற்பொருந்தாதன இருந்தால் அவற்றைத் தக்க காரணங்களோடு எடுத்துக்காட்டிப் பின்னர்த் தாங் கூறுவனவேபொருத்தமாமென்று ஒழுங்காகக் காட்டுதலே செயற்பாலதாம். ஆகமம் வேதத்தினும் காலத்தால் மிகப்பிற்பட்டதென்பதற்கு வேதங்கள் எழுதப்பட்ட ஆரியபாஷை மிகப்பழையதாதலும், ஆகமங்கள் எழுதப்பட்ட சம்ஸ்கிருதபாஷை மிகப்புதியதாதலுமே ஒரு தக்கசான்றாம். விரிக்கிற் பெருகும்" என்பதாம்.

பரபக்கமறுதலை

இவ்வேதாசலம் காட்டிய இந்தப்பகுதியால் வேதங்கள் முன்னும் ஆகமங்கள் பின்னுமாக அறிவுடையோரால் இயற்றப்பட்டனவேயாமென்னும் தமது கொள்கையை மறுத்து வேதாகமங்களை ஆக்கியோன் சிவபெருமானென்று யார் எழுதிவைத்தார்களோ சொல்லுவார்களோ அவர்கள் வெறு நம்பிக்கையாய் எழுதிவைத்தார்களென்றும் சொல்லுவார்களென்றும் இவர் அவர்களுக்கெல்லாம் பழி கூறுவாராயினர்.

இதனால் முதலில் இப்பழியை இவ்வேதாசலம் யார்தலைக்குக் கொண்டுவந்துவிட்டனர்? வேதாகமங்களை ஆக்கியோன் சிவபெருமானே யென்று திருவாசகம் சொன்ன மாணிக்கவாசகர்தலைக்கும் அவர்பாற்றிருவாசகங்கேட்டுக்கையேடுபிடித்தெழுதிய திருவாசகவித்தியார்த்தியாகிய வேதியப்பிரமசாரி ஸ்ரீமந்நடராஜமூர்த்திதலைக்குமன்றோ இப்பழியைக்கொண்டுவந்துவிட்டனர். வேதாகமத்தை ஆக்கியோன் சிவபெருமானே யென்று திருவாசகம் சொல்லிய மாணிக்கவாசகர் வெறுநம்பிக்கையாய் அதனைச்சொன்னரென்றதனால் அவர் அதனைக் காரியநம்பிக்கையாய்ச் சொன்னவரல்லரென்றும் அதனை எழுதிவைத்த நடராஜமூர்த்தி காரியநம்பிக்கையாய் எழுதிவைத்தவரல்லரென்றுமன்றோ இவ்வேதாசலம் இருவர்தலைக்கும் அப்பழியைக் கொண்டுவந்துமுடித்தனரென்பதை யார்தாம் மறுக்கவல்லுநர்?

இனி அவர் தமதுவசனத்தில் வெறுநம்பிக்கையாயென்றெழுதியிருக்கின்றார். வெறுநம்பிக்கையாயோ (Blind belief) வெறுநம்பிக்கையாயோ என்பது இடைப்பிறவரல்வினு. அதனை விடுத்து விஷயத்திற் செல்வாம்.

இனி இவர் எழுதியபடி "வெறுநம்பிக்கையா"வார் யார்? காரியநம்பிக்கையில்லாதவரோ? அன்றோ? அவர்கள்தாம் யார்? ஆப்தரல்லாத பிராந்தர்கள் அல்லது வஞ்சகர்களோ? அன்றோ? இங்கே மாணிக்கவாசகரும் நடராஜமூர்த்தியும் இவர்கொண்டபடி காரியநம்பிக்கையில்லாத வெறுநம்பிக்கையர்களாகிய பிராந்தர்களா? அல்லது வஞ்சகர்களா? அல்லது மேலோர்கொண்டபடி ஆப்தர்களா?

வேதாகமத்தை ஆக்கியோன் சிவபெருமானென்று சொன்ன குற்றத்துக்காக மாணிக்கவாசகரும் எழுதிவைத்தகுற்றத்துக்காக

நடராஜமூர்த்தியும் இவ்வேதாசலத்தின் காலத்தில் ஆப்தர்களல்லாத அனுப்தர்களாய் வெறுநம்பிக்கையாளராய் முடிந்த பேரதிசயத்தைச், சைவசமயிகளே, பார்த்தீர்களா? அவர்களெப்படியாயினும் ஆகுக. அவர்கள் சொன்னதும் எழுதிவைத்ததுமாகிய வெறுநம்பிக்கைத்திருவாசகத்தை ஆராயாது நம்புதல்செய்து அதற்கு அவரினும் நுண்மதியாளராகிய இவ்வேதாசலம் அவர்களைப்போலத் தாமும் "வெறுநம்பிக்கையாய்" உரையெழுதப் பின்னிறங்குவதாமே இஃதென்னை அநியாயம்! இது அவரது மதிகேடா! விதிகேடா! வேதாகமத்தை அவர்கள் சிவன்மேலேற்ற இவர் சீவர்கள் மேலேற்றப் பரஸ்பரவிருத்தமாகிய இருவர்சண்டையுந்தீர்ந்தன்றோ இவர் திருவாசகத்துக்கு உரை எழுதவரல்வேண்டும் அதுவன்றி இவர் அவ்வெறுநம்பிக்கைத் திருவாசகத்துக்குக்கிட்டவரலாமா? இவர் திருவாசகத்தை "வெறுநம்பிக்கையாய்" ஆராயாது நம்புதல்செய்து உரைசெய்யவந்தமையால் தன்னை மோசஞ்செய்யவந்த இவரது திருவாசகவிரிவுரையை அத்திருவாசகம் உதைக்க அது தலைகுப்புறவிழுந்தெழுந்து அத்திருவாசகபூமியின்றும் இரிந்து மோச நாச ஆபாச இரிவுரையாயோட்டெடுக்கின்ற அதனதுவேகத்தைச், சைவசமயிகளே, பாருங்கள்.

இனி இவர் "மிக்கவேதமெய்ந்நூல் சொன்னவனே" என்றும்,

"மாவேட்டாகியவாகமம்வாங்கியும்
மற்றவைதம்மைமகேந்திரத்திருந்
துற்றவைம்முகங்களாற்பணித்தருளியும்"

என்றும் வரும் இவ்விரண்டு திருவாசகவசனங்களையும் தமக்கு அறிமுகமில்லாத பிரெஞ்சுப்பாஷை ஜர்மன்பாஷையென்றுநினைத்தாரா? கிறிஸ்தியன்காலீஜில் தமிழ்ப்பண்டிதராயிருந்து அங்கிருந்தபடியே திருச்சங்கர்கம்பனிக்குச் சர்வஞ்ஞமறைமலையடிகளாய்வந்த இவர் இத்தமிழ்வசனம் இரண்டிற்கும் யாது பொருள்கொண்டார்? வேதாகமம் கடவுள் வாய்மொழியென்று

பொருள் கொண்டாரா? அல்லது மக்கள்வாய்மொழியென்று பொருள்கொண்டாரா? ஐம்முகங்களென்றது யாதுமுகம்? சதாசிவனது முகங்களா? மக்களது முகங்களா? மக்களது முகமேயென்று இவர் இந்திரஜாலம் பண்ணமுடியுமா? மாணிக்கவாசகர் குறித்த இவ்விருவசனங்களையும் தெரிந்துசொன்னாரா? தெரியாமல் சொன்னாரா? நடராஜமூர்த்தி தெரிந்தெழுதினாரா? தெரியாமலெழுதினாரா? அநாமதேயர்களாகிய மக்கள்வாய்மொழியை இரவல்வாங்கித்தான் சௌரியம்பண்ணித்தான் மாணிக்கவாசகர் வேதாகமத்தைத் தமது வெறுநம்பிக்கைப்பரமசிவன் செய்ததாக அவருக்குப் பட்டாபிஷேகம் பண்ணிவைத்தாரா? எத்தனைக்கெத்தனை அறிவுடையவர்களானாலும் இயற்கையில் சிற்றறிவுஞ் சிறுதொழிலுமென்னும் பசுத்துவமலகிருமிகளாகிய மக்கள்வாய்மொழியைத்தான் பரமசிவன் இரவல்வாங்கிச் சநகாதிநால்வருக்கும் அவற்றது உட்பொருளை உபதேசம் பண்ணினாரா? இப்பாசமக்கள்வாய்மொழியைப் பரமசிவன் இரவல்வாங்கிக்கொண்டுதான் காலிற் சிலம்பணிந்தாரோ? பாண்டியனுக்காகக் குதிரை யேறினாரோ? முப்புரமெரிக்கத் தேர்க்குதிரைகொண்டாரோ? சிராதார்ச்சனீயத்திலும் சோமயாகியாகத்திலும் நாயாகக் கொண்டாரோ? இம்மலமக்கள்வாய்மொழியை இரவல்வாங்கிக்கொண்டுதான் பரமசிவன் தமக்குப் பீடமாகப் பாதுகையாகக் கோவணமாக வாகனமாக ஆஞ்ஞையாக அதை உபயோகித்து இவ்வளவும் பிறரதென்று வெளிக்கு வாராமல் தன்னதென்றுகாட்டி உலகத்தை வஞ்சித்தாரா? பண்டைமக்களும் பிற்றைமக்களும் முன்னும் பின்னுமாகக் கொஞ்சம் கொஞ்சமாகச் செய்து வேதாகமமாய் முழுதும் நிரம்பும்வரை இவ்வேழை மக்கள் வாய்மொழியை அங்கலாய்த்துக்காத்துக்கொண்டிருந்துதான் இப்பொய்மக்கள்வாய்மொழியைப் பரமசிவன் இவ்விப்பெருங்களரகச்சரிபண்ணிக்கொண்டாரோ?

இத்துறைகளெல்லாம் இச்சர்வஞ்ஞமறைமலையடிகள் கண்டுபிடிப்பது தெரிந்தால் பரமசிவன் வேறுவிதஞ்செய்திருப்பார். இந்நாள் இவ்வண்ணம் இம்மறைமலையடிகள் தமது களவுகண்டு வெளியிடுவரென்பது தெரிந்தால் "மன்னுகலைதுன்னும்பொருண் மறைநான்கேவான்சரடாத், தன்னையேகோவணமாச்சாத்தினனைக் காண்சாழலோ" என்ற திருவாசகத்தை நடராஜமூர்த்தி எழுதிக்கொள்ளச் சம்மதித்திருக்கமாட்டார்!

ஆதலால் திருவாசகத்தில் பரமசிவன் புத்திமோசமாக அகப்பட்டுக்கொண்டதை இம்மறைமலையடிகள் கண்டுபிடித்துவெளிப்படுத்திக்கொண்டது மெத்தப்பெரியகாரியந்தான்!

ஆனால் பரமசிவனை ஆக்கியோனாகக் கொண்டு திருவாசகம் கூறிய வேதாகமம் இப்பொழுது வடமொழியில் வேதாகமப் பெயரால் வழங்கும் இதுவன்று, அதுவேறு என்பாராயின், மாணிக்கவாசகரை ஆக்கியோனாகக்கொண்டுள்ள திருவாசகம் இப்பொழுது திருவாசகம் என்ற பெயரால் தமிழில்வழங்குந்திருவாசகமன்று அது வேறென்று யாமும் சொல்வோம். அப்பொழுது இவருக்குத்திருவாசகமெங்கே? இவரது திருவாசகவிரிவுரையெங்கே? திருவாசகவிரிவுரை ஆசிரியர் இவரெங்கே? இவர்தாம் மறைமலையடிகளாவதெங்கே? இங்ஙனமன்று மாணிக்கவாசகர் செய்த திருவாசகம் இதுதான் என்பாராயின், அங்ஙனமன்று, பரமசிவன் செய்த வேதாகமமும் இதுதான் என்பேம். அது எப்படி என்பாராயின் இதுஎப்படி என்பேம். வேதாகமம் மக்கள்செய்ததே அது பரமசிவன் செய்தாரென்றது முகமனென்பாராயின், திருவாசகம் புலவர்கள் பலர் செய்ததே, அதனை மாணிக்கவாசகர் செய்தாரென்றதும் முகமனென்பேம். அது எப்படி என்பாராயின் இது எப்படி என்பேம். இனி வேதாகமமே சாரியரூபமானபடியால் செய்தவன் ஒருவன் வேண்டும். ஆங்

ஞானம் வேண்டவே அவன் மக்களுக்கு அனுக்கிராககனும் ஞான காரகனுமாகிய பரமசிவனே என்பது பாரிசேட அளவையாற் பெறப்படுமோ! அன்றோ!! இவ்வேதாகமவிரோதியார் வேதாகமம் மக்கள்வாய்மொழி, அறிவுடையோர்கள் வாய்மொழி என்றுரே. அவர்கள் வேதாகமத்தைச் செய்து பரமசிவனைக் கண்டார்களா? பரமசிவனைக் கண்டு வேதாகமங்களைச் செய்தார்களா? முந்தியபடியெனின் பரமசிவன் அவர்களுக்கு எட்டுச்சுரைக்காயாக வேதாகமம் பயனில்கூற்றுயொழியும். பிந்தியபடியெனின் கொக்கின்றலையில் வெண்ணெயை வைத்துக் கொக்கைப் பிடித்த கதையாய் முடியும்.

இனி இவ்வேதாசலம் கூறுமாறு வேதாகமத்தைச் செய்தவர்கள் மக்களென்றால் அவ்வேதாகமஞ் சொல்லிய பரமசிவன் அம்மக்கள் செய்த பரமசிவனே! அன்றோ!!

அம்மாணிக்கவாசகர் கூறுமாறு வேதாமத்தைச் செய்தவர் பரமசிவனென்றால் அவ்வேதாகமஞ்சொல்லிய பரமசிவன் பரமசிவன் செய்த பரமசிவனே! அன்றோ!!

மண்ணிலே பிறந்து மண்ணிலே மடிகின்ற மக்கள் செய்த பரமசிவன் அம்மக்களேபோல மண்ணிலே பிறந்து மண்ணிலே மடிகின்ற மண்ணைப்போன பரமசிவனே! அன்றோ!!

விண்ணிலே பிறந்து விண்ணிலே முடிகின்ற பரமசிவன் செய்த பரமசிவன் அப்பரமசிவன்போல விண்ணிலே தோன்றி விண்ணிலே முடிகின்ற விண்ணைப்போன பரமசிவனே! அன்றோ!! விண்ணிலே முடிகின்ற விண்ணைப்போன பரமசிவனென்றது எமது நிறைசெல்வத்திருவுடையந்தணர்கள் சேவிக்கின்ற இவ்விலச்சிதம்பரரகசியத்தை.

சைவசமயிகளே! வேதாசலம் வேதாகமத்துக்குக் கொள்ளி

செருகிய புண்ணியமாகக்கிடைத்த அப்பண்ணுப்போன வேதாசலபரமசிவன் உங்களுக்குவேண்டுமா?

மாணிக்கவாசகர் வேதாகமத்துக்கு வித்திட்டு விளைவுசெய்த புண்ணியமாகக்கிடைத்த அவ்விண்ணுய்ப்போன மாணிக்கவாசகபரமசிவன் உங்களுக்கு வேண்டுமா?

மண்ணுய்ப்போன வேதாசல பரமசிவன் வேண்டுமெனின், அப்பரமசிவனுக்கு மூலமாகிய வேதாசலம் சொன்னபடி கேளுங்கள். அப்படிக் கேட்பதானுல் வேதாகமம் மக்கள்வாய்மொழியானபடியால் அதின்படிவந்த விபூதி, ருத்திராக்ஷ, பஞ்சாக்ஷர, ஆன்மார்த்த பரார்த்த, ஆலய நித்திய நைமித்திக பூசை உற்சவவழிபாடுகளெல்லாம் மக்கள் கற்பனையாய்ப் பொய்யாய் மண்ணுய் மடியுமென்றேற்படுகிறபடியால் பட்டினிவிரதங்களால் ஜபதபங்களால் யோகஞானங்களால் போகபோக்கியங்களை இழந்து வீணுக வாடாமல் அவற்றை மரியாதையோடு இன்றே கைவிட்டுவிடுங்கள். எதனுலென்றுல் மக்களாகிய மண்ணோர் செய்ததெல்லாம் முடிவில் மண்ணுய்ப்போமென்பது அநுபவமோ! அன்றே! அதனுலென்க.

அல்லது விண்ணுய்ப்போன மாணிக்கவாசக பரமசிவன் வேண்டுமெனின், பரமசிவனுக்கு மூலமாகிய மாணிக்கவாசகர் சொன்னபடி கேளுங்கள். அப்படிக்கேட்பதானுல் வேதாகமம் பரமசிவன் வாய்மொழியாய் முடிந்தபடியால் அதின்படிவந்த விபூதி, ருத்திராக்ஷ, பஞ்சாட்சர, ஆன்மார்த்த, பரார்த்த, நித்திய, நைமித்திக பூசை உற்சவ வழிபாடுகளெல்லாம் பரமசிவகற்பனையாய மெய்யாய் விண்ணுய்முடியுமென்றேற்படுகிறபடியால் அதற்காக நியாயியங்களாகிய போகபோக்கியங்களை மாத்திரம் வேண்டிய அளவு அநுபவித்துக்கொண்டு அநியாயியங்களைத் தள்ளி அதிககாலத்தை உபவாச விரதங்களால், ஜபதபங்களால், யோகஞானங்

களால், சித்திமுத்திகளால் நல்லகாலமாக்கி எடுத்த பிறவி பயன்படுவதாகக் கடைப்பிடியுங்கள்.

சிவன்கள், ருத்திரர்கள், விஷ்ணுக்கள், பிரமாக்கள், தேவர்கள், இருடிகள், முனிவர்கள். ஆசாரியர்கள் சித்தர்களாயும் முத்தர்களாயும் அநுபவித்துப் பரம்பரையிற் கொண்டுவந்த வேதம், ஆகமம், தேவாரம், திருவாசகம், புராணம், இதிகாசம், ரசவாதம், காயகல்ப்பம்; சாங்கியம், யோகப், மீமாம்சை, பௌத்தம், சமணப், லோகாயதம் முதலிய பரஞான அபரஞானவித்திபாப்பிரஸ்தானங்களெல்லாம் பரமசிவனைவித்தாகவைத்துவந்த அழியாப்பெருஞ்செல்வங்களாய் அந்தந்த அதிகாரிகளுக்கு ஆத்மாபிருசிகாங்களாய்த் தோணிக்கின்றன வென்பதைப் பொதுநிலைபற்றி ஓர்ந்துகொள்ளுங்கள். அவற்றுள்ளும் பார்யந்திக முதன்மைத்தாகிய பிரமாணமூர்த்தன்னியம் வேதாகமம் என்பதைக்கடைப்பிடியுங்கள். அங்ஙனம் கடைப்பிடிப்பதானல், மாணிக்கவாசகருக்கும், அவர் சொல்லிய திருவாசகத்துக்கும், அதனை எழுதிய நடராஜமூர்த்திக்கும், திருவாசகப்பொருளைக் கண்டனுபவித்த திரிலோகாசாரியர்களாகிய தில்லைத்திருவுடையந்தணர்களுக்கும், அதனைக் கேட்டனுபவித்த அரிபிரமேந்திராதி தேவர்களுக்கும், திருவாசகத்தை அப்பரம்பரையாலனுபவித்துவரும் அகத்தியர், சிவாலயமுனிவர் முதலிய சித்தர்களுக்கும், திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளையாருக்கும், அவரருளாலெல்லாம் ஓதாதுணர்ந்த நம்பியாண்டார்நம்பி, திருமுறைகண்டராஜராஜ அபயகுலசோளர், பெரியபுராணங்கண்டசேக்கிழார்பெருமான், அதனைக்கொண்ட அநபாயசோளர்என்னும் திருமுறைகாவலர்களுக்கும், பெற்றான்சாம்பான், சித்தமுனி, முள்ளிச்செடி, கருடன் இவர்களுக்கு முத்தியளித்தசத்தியோ முத்திப்பிரதர் எமதுமெய்கண்டசந்தானசைத்தாந்திகபூஜ்பபாததுரீயபீடாதிபதி ஸ்ரீமதுமாபதிசிவனர் முதலிய அனுபவ தேசிகர்களுக்கும், முழுவிரோதிபாப்‘கிரகநக்ஷத்திரபரியந்தி

மலகிருமிநியாய'மாகப் படையெடுத்துவந்து வேதாகமத்தை ஆக்கி யோன் சிவபெருமானன்றென்று மனந்துணிந்துகிளம்பிய வேதா சலத்தினது நாய்தீண்டா, நரிதீண்டாப், பேய்தீண்டாப், பைசா சந்தீண்டா இரிவுரையைக் கண்ணாற்காணாதீர்கள்! கையாற் றீண் டாதீர்கள்! செவியால் கேளாதீர்கள்! மனசால் நினைக்காதீர்கள்!

இன்னும், அம்மட்டோ, சைவசமயிகளே! மேனாட்டு வெ ண்மக்கள் எங்கள் ஆத்மபோஷக வேதாகமத்தின் ஒழிபாய்ச் சரீ ரபோஷகமாகிய ஆயுர்வேதத்தினது ரசவாத, காயகல்ப, ஆகா சகமன, சுவர்க்கசஞ்சார, பரகாயப்பிரவேச அமானுஷ்ய அற்புத சித்திகளை இன்னும் கனவினுங்கிட்டமுடியாது அலமருகின்றனர். இவ்வேதாசலமோ அவருள் ஒருசாரார் செய்த பைலலோஜி என் னும் சிப்பியைக் கொண்டு வேதாகமம் என்னும் பெருங்கடலை அளப்பாராய் அது கடவுள்வாய்மொழியன்று முன்னும் பின்னு மாய் வந்த மக்கள் வாய்மொழியென்று இந்திரஜாலவித்தை கா ட்டிச், சைவசித்தாந்தியென்று தமக்கு நாமமும் புனைந்து, உரை யெழுதி இவ்வுலகை வஞ்சித்துவருவாராயினர். இப்படிப்பட்ட வேதாசலத்துக்கு அவரது திருவாசக இரிவுரை வல்லூறுநோட் டமின்கிழ்த் திரு. வி. கலியாணசுந்தரமுதலியார் தந்த மதிப்பு ரையைச், சைவசமயிகளே, பார்த்தீர்களா?

உலகியலும் நூலியலும் தமது இளமையிற்றானே ஏற்றபெ ற்றியுணர்ந்து முன் "தேசபக்தன்" இப்போது "நவசக்தி" பத் திரிகாசிரியராய்க் காந்தியடிகளுக்கு வழித்தோன்றலாயிருந்து வரும் விவேகியாகிய இக்கலியாணசுந்தரமுதலியார் "கெடுவாரி ன்னுங்கெடுக, கெட்டாலன்றிச் சிட்டாராகார்" என்னும் நியாய த்தாலோ, கண்ணோட்டத்தாலோ, அதிப்புரையாகிய இம்மதிப்பு ரையைத் தந்தனர். "சுமார் ஐயாயிரம் ரூபா பெறத்தக்க ஆங் கில நூல்களின்சாரம் சுவாமிகளுள்ளத்திற் பரிணமித்திருக்கிற"

தென்று திருவாசகவிரிவுரைக்கு மேன்மைபவடைப்பாராய் அத னை வேதாசலத்துக்கு மாட்டேற்றினர். அம்மட்டில் அத்திரு வாசக விரிவுரைக்கித்தனை மதிப்புரையானால், சுமார் ஐந்துலக்ஷம் ஐந்துகோடி ரூபா பெறத்தக்க லைபிரேரியின்சாரம் உள்ளத்திற் பரிணமித்த ஆங்கிலேயர் அமெரிக்கர் ஜர்மெனியர் திருவாசகவிரி வுரை எழுதுவார்களென்றால் அத்திருவாசகஉரைக்கு இம்முதலி யார் எத்தனைமதிப்புரை தருகின்றாரோ! தெரிகின்றிலம். ரூபாய மதிப்புப்பெற்ற ஆங்கிலநூன்மதிப்பின்பேரில் முதலியார் வேதா சலத்தினது ஞானத்துக்கு மதிப்புரை தருவாரானால், அவ்வித மதிப்புற்ற ஆங்கிலநூலே கண்ணாலெறிட்டுப்பாராத சமயாசா ரியர் சந்தானுசாரியர்கள் முதலியோர் ஞானமெல்லாம் ஒருகா சுக்கேனும் மதிப்புரைபெறாத ஞானமென்றன்றோ கொண்டுவந் திமுடித்தனர். இது இவ்வேதாசலத்துக்கும் முதலியாருக்கும் உள்ள முற்கோபவாசனையினால் விரோதார்த்தபரமாக (Ironical) வேதாசலத்தை முதலியார் புரளிபண்ணிய விநயமென்பேமா? அல்லது காட்டுவான் ஐந்மழுக்கறையாகிக் காண்டான் கன்மழுக் கறையாய் வெள்ளைக்காக்கை பறக்கக்கண்ட அவிநயமென்பேமா? வேதாசலத்தினது ஆங்கிலநூனுனிப்புற்கல்விதான் திருவாசக த்தையும் சைவசமயத்தையும் குடிகெடுக்கத்தூண்டி வேதாசலத் தை வைதிகசைவமரபுதவறிக்குடிகெடச்செய்ததென்பதை யுண ர்ந்த பழைய இந்தியஸ்தாபகராகிய இம்முதலியார் அங்ஙனம் வேதாசலத்தைப் புரளிபண்ணினரென்பதில் ஏமக்கையமில்லை யென்ப குங்கியகந்தெரிந்த வையகத்தோர் சிலர். "திருவாசக விரிவுரையிலுள்ள தத்துவநுட்பமும், பொருளாழமும், இலக்க ணக்குறிப்பும், உரைநடைவனப்பும், புலவர்களை மகிழ்விக்கும் தமிழ்ப்புலமையோடு மேனாட்டுப்புலமையுமுடைய ஒருவர் உயரிய ஓர் தமிழ்நூலுக்கு விரிவுரை காணப்புகுந்தது இதுவே முதன்முறை" என்று வேதாசலத்துக்கு மதிப்புரை தருகின்

ரூர் முதலியார். "தத்துவவிரோதமும், பொருள்வெளிறும், இலக்கணவழுவும், உரைநடை அவலக்ஷணமும், புலவர்சபைக் கவல்விக்கும் புன்புலமையோடு மேனாட்டுப்புலமையினுனிப்புற் கடித்த மென்புலமையுமுடைய ஒருவர் உபரிய ஒரு செந்தமிழ்த் தெய்வத்திருமறைக்கு 'விரிவுரை' காணப்புகுந்தது இதுவே முதன்முறை" என்று மதிப்புரை தருகின்றும் யாம். இவற்றுள்ளது உண்மைமதிப்புரை என்பது இனிவருங் கண்டனங்களிலும் பரக்கக் காண்க.

முதலியார் மதிப்புரைக்குக் கண்டனமெழுதுவது எமக்கு ஈண்டு இதம்பரமன்று; பிரசங்கிகமேயாம். (அதாவது ஒன்று சொல்லவந்த இடத்து அதனது தொடர்புபற்றியதன்கண் அவசரநோக்கி விவசரிக்கநேர்வது) ஆதலால் சுருக்கி முடிக்கின்றும். அஃதாவது குறித்த கல்யாணசுந்தரமுதலியார் மேனாட்டுப் புதுஆடை முதலியவற்றைத் தள்ளிக் கீழ்நாட்டுப் பழைய கதருடை முதலியவற்றைக்கொண்டு பழைய சுயராஜ்யத்தைக் கைக்கொள்ளமுயல்கின்ற காந்தியடிகள் கட்சிக்குப் பிறந்த முதற்பிள்ளைகளுள் ஒருவரோ ! அன்றோ !! அப்படிப்பட்ட முதலியார் வேதாகமவிரோத மேனாட்டுவிபரீதப்புலமையைத் தள்ளிவிடுதற்கும் வேதாகமசம்மதக்கீழ்நாட்டுச்சுரோத்திரியப் புலமையைத் தாம் விரதங்கொண்ட காந்தியடிகள்நியாயத்தால் தமது நவசக்தியைக்கொண்டு நவிகரித்தற்கும் கடமைப்பட்டிருக்கின்றாரென்பதை யாரறியாதார்?

ஆதலால் மேனாட்டு ஆங்கிலநூற்புலமையை வேதாசலத்திற்குச் சுத்திகாருப்பியநியாயமாக(இப்பியில்வெள்ளியாக)முதலியார் ஆரோபித்து வணக்கம் செலுத்தியது உற்றுநோக்குழிச் சூரபத்மாவைச் சுக்கிரனுடதேசித்தநியாயமாக அவ்வேதாசலத்தைப் புரட்டி எடுக்கப் புரளிபண்ணின கருணையின்செயலே என்பதைப்

பாரிசேட்அளவையால் அனுமானிக்கின்றோம். அல்லாக்கால் பல்லிலக்கரூபாய் பெற்ற ஆங்கிலகலைஞான ஜட்ஜஸ்வர, ஸமுதாயேஸ்வர, ஸந்திக்ஷேதஸ்வர, சூனியேஸ்வர, நிரீஸ்வரவாதிகளுக்கெல்லாம் வேதாசலத்துக்குப்பார்க்கிலும் அதிகவணக்கத்தைச் செலுத்த அம்முதலியார் கடமைப்பட்டவராதல்வேண்டுமோ? அன்றோ !! அவர் அங்ஙனம் அவர்களுக்கு அக்கடமை செலுத்துகின்றாரா? அஃதங்ஙனஞ்செலுத்தாமையால் அவர் அவர்களை வைத்து அவ்வறிவிற்றாழ்ந்த வேதாசலத்துக்குச் செய்த வணக்கம் புரளியே பிறிதில்லையென அப்பாரிசேடத்தைத இவ்வருத்தாபத்தி வலியுறுத்துவதாயிற்றோ! அன்றோ !!

பல்விலக்கம், பல்கோடி ரூபாய்பெற்ற மேனாட்டு மில்(Mills)களைக் கெடுத்து அதனால் நமது பிறிற்றிஷ் விநயராஜ்ஜியத்துக்கு வலியின்மை வருவதும் நோக்காது, ஒருசமயம் தமது அபீஷ்ட சுயராஜ்ஜியசித்திமத்தியில் இந்தியகண்டத்தை பிறிற்றிஷ் அரசு கைவிட்டால் இது அநாயகமாய் உட்கலாமெய்தித்துன்புற வருமோவென்னும் அநுதாபசிந்தைக்கவகாசமுங்கொடாது, இரண்டு ரூபாய்ப் பழைய ராட்டணநிலையை நிறுவிப் பழைய கதருடையைப் பரப்பவந்த இந்நவசக்தி கலியாணசுந்தரமுதலியார் எத்தனை கோடானுகோடி பொன்களைச் சொரிந்தாலும் விலைமதிக்கவொண்ணாததும், ஸர்வலோகமில்லைக் கண்டுபிடித்த மஹாசதுரராகிய (Discoverer) பரமசிவனென்னும் (Maker)மெக்கால் கண்டுபிடிக்கப்பட்டதும், இகத்தனவாகிய அதமசித்திகள்மட்டோ, ஒரு பேருலகைப் படைக்கவும், காக்கவும், அழிக்கவும் வல்ல பிரம்மத்துவ, விஷ்ணுத்துவ, ருத்திரத்துவ மத்திமசித்திகளைத் தருவதாய் அவற்றிற்கு வாயில்களாகிய உபாசனைகளை விரித்து அனேக பிர்ம விஷ்ணு ருத்திரர்களைப் பெற்றுவரும் பரமமாதாவாய், முடிவில் சச்சிதானந்தசொரூபமாகிய சிவனை காணெ

ன்னும் சிவஸோஹம்பாவனோபாசனை தந்து பரசிவசாயுஜ்ஜியசிவ போக உத்தமசித்தியை உபகரித்துக் கணக்குமுடிப்பதுமாகிய அகண்டார்த்தபோதக வேதாகமராட்டணத்தை நிலைதளரச்செய்து அதிற்கோப்புண்ட திருமுறைநூல்களாற் கோக்கப்பட்ட சைவசித்தாந்தமென்னும் சிவகதாரடையைச் சிவநாயகமன்று, சிவநாயகமேயெனக்காட்டி அதனைப் பரவவொட்டாது மேனாட்டுப் பைபலலோஜி முதலிய சீமை ஆடைகளைப் பிரமாணநூலாடைகளாகப் பரப்பவந்த இவ்வேதாசலத்தினது சிவசுயராஜ்ஜியவிரோதத்துக்குத் தாமும் உடன்படுவாராய் மதிப்புரைதந்த இவர் தம்மதிப்புரையைக் கண்டால் இவ்வுலகம் மற்று இவரை என் சொலாது? இவர்க்கு இந்த முதலியாருக்கு இது அடுக்குமோ ! அடுக்குமோ !! என்று சொல்லாதுகொல்லோ நல்லாறுபடைத்த இத்தொல்லுலகு !!

பழைய கதராடையைப் பரப்புதற்குப் பிராணத்தியாகம் வரை அஞ்சாதநெஞ்சினெஞ்சாமுபற்சியராய் நிற்கும் இம்முதலியார் திருவாசகமென்னும் செந்தமிழ்த்தெய்வத்திருமறையாகிய பழைய சிவகதராடையைக் கெடுக்கவந்த இவ்வேதாசலத்துக்குப் பழித்துணையாக வழித்துணைநின்ற மாபாதகம் இவர்க்கு அடுக்குமோ! அடுக்குமோ !! என்று சொல்லாதுகொல்லோ நல்லாறுபடைத்த இத்தொல்லுலகு!!

சைவசமயிகளே! இன்னுமொரு போதிசயங் கேளுங்கள். வேதாசலம் திருவாசக இரிவுரை எழுதப்புகுந்ததும் அதற்கு நவசக்திகலியாணசுந்தரமுதலியார் மதிப்புரை தந்ததுமாகிய இவ்விருவருரையுஞ் சுற்றிச்சுற்றிவந்த சுஞ்சுந்துறை யாது? பார்த்தீர்களா? உண்ணத்திவ்யாமிருதமும், உடுக்கப் பொனனுடையும், பூணக்கௌத்துவமும் பிறர் பிறர் கொள்ளத் தாம் எலும் பணித்திசம்பரவிஷகபளமிஷாசனராய் நின்ற பரமசிவனுக்கு

அவர்கட்டிய கோவணமே அவருக்குச் சொந்தமில்லை. அது பண்டைமக்கள் பார்த்துக்கொடுத்தது. கொடுத்த அதுவும் தன்னுள் நாலிழை ஒன்றுக்கொன்று மாறுபட்டுக்கிழிந்த பல பிடுங்கல்களாயது. அதிலும் அப்பிடுங்கல்களாகிய கொள்ளற்பாலன. அல்லா தவற்றைத்தள்ளிப்பின்றைமக்களால் அதுபழையஉருப்படி தொலைக்கப்பட்டது. படவே பரமசிவனைக் கோவணக்துண்டிக்கும் வழியில்லாத திவணக்கோலமாக்கிய குயுக்திக குதர்க்கமோசநாச ஆபாச சங்கந்துறையிலன்றோ அவ்விருவருரையும் வந்து முடிந்தன!! இது வெட்டவெளிச்சமோ! அன்றோ!! பாருங்கள்.

சைவசமயிகளே!

இதில் யாம் சொல்வதுதான் குதர்க்கமென்பீர்களாயின்;

"என்னப்பனெம்பிரானெல்லார்க்குந்தானீசன்
துன்னம்பெய்கோவணமாக்கொள்ளுமதுவென்னேடீ
மன்னுகலைதுன்னுபொருண்மறைநான்கேவான்சரடாத்
தன்னையேகோவணமாச்சாத்தினன்காண்சாழலோ"

என்றெழுந்த எங்கள் அபிநவசிவமணிவாசகபரிவிராசகபரமாசார்யபகவத்பாதநிர்த்தானந்தஞானகாரணேஸ்வாதீனதயாரசமானுபாணயோக்கிய பாக்கிய தாயகநாயகனாருளிச்செய்த செந்தமிழ்வேதத்திருவாசகநவநீதச்செல்வத்தையுமா குதர்க்கமென்று சொல்லுவீர்கள்.

வேதம் கடவுள்வாய்மொழியன்று, மக்கள்வாய்மொழியென்று இவ்வேதாசலம் சொல்லியதுண்டா? இல்லையா?

திரு. வி. கல்யாணசுந்தரமுதலியார் அதற்கு மதிப்புரை தந்ததுண்டா ? இல்லையா?

பரமசிவனுக்குக் கோவணம் வேதமே பிறிதில்லையென்று திருவாசகம் சொல்லியதுண்டா? இல்லையா? அதனால் வேதாசலம்

முதலியார் இருவருமாகப் பிள்ளை பிறந்த இவ் ஐயாயிரக்கலியில் கோவணமும் பரமசிவனுக்குச் சொந்தமன்று, மக்கள் வீட்டிரவ ற்கோவணமென்பதாயிற்று? இல்லையா?

வேதத்தில் பண்டைமக்கள் செய்த அனேக தவறுகளைப் பின்றைமக்கள் திருத்தி ஆகமநூல் இயற்றினரென்று வேதாசலம் தனது இரிவுரையில் எழுதியதுண்டா? இல்லையா? அதனால் பரமசிவனது கோவணம் அனேக தப்புந்தாறுகளுமாய்ப் பலபிடுங்கல்களாய் உருப்படியே இல்லாமற்போயிற்றென்பது அத்திருவாசக இரிவுரையாளர் மதிப்புரையாளர் என்னும் இருவர்தமதுங்கொள்கையாயிற்று? இல்லையா?

ஆதலால் யாம் சொல்லியது குதர்க்கமா? அல்லது இவ்வேதபாதக வேதாசலமும் வேதாசலமதிப்புரைக் கலியாணசுந்தர முதலியாரும் சொல்வது குதர்க்கமா? பாருங்கள். ஆனைபார்க்க வெள்ளெழுத்தா?

சைவசமயிகளே! வேதாசலமும் நவசக்திமுதலியாரும் சேர்ந்து பரமசிவனது கோவணமே அவருக்குச் சொந்தமில்லாமல் அது உருப்படியே சரிப்படாத அங்கீனமாக அவரை இத்தனை இழுபறியிற் கொண்டுவந்துவிட்டதொன்றோ!

"மறையேநமதுவீடிகையாமறையேநமதுபாதுகையர்
மறையேநமதுவாகனமாமறையேநமதுநூபுரமா
மறையேநமதுகோவணமாமறையேநமதுவிழியாகு
மறையேநமதுமொழியாகுமறையேநமதுவடிவாகும்."

"வேதந்தானேநமதாணைச்சத்திவடிவாய்விதிவிலக்காய்ப் [கும்
போதங்கொளுத்திகிலேநிறுத்திப்போகங்கொடுத்துப்பல்லுயிர்க்
பேதஞ்செய்யும்பிணியவித்தெம்பிரியாவீடுதருவதாதே
ஞதஞ்செய்யுந்தார்வேந்தேநமதுசெங்கோலதுவாகும்."

என்னுந்திருவிளையாடற்புராணச்செய்யுளில் வைத்து நோக்கும்பொழுது வேதம் மக்கள்வாய்மொழியென்னும் விபரீத சிந்தனவேதாசலமதத்தின்படி பரமசிவனிருக்கும் அவரது பீடப்பலகையும், அவர் அடிவைத்து நடக்கும் பாதுகையும், அவர் ஏறிவரும் வாகனமும், அவரது நடனக்கோலப்பாதச்சிலம்பும், அவர் சீவர்களை உற்று நோக்கி அவர்களுக்கு வழிகாட்டும் அவரது கண்களும், சீவர்களை முன்னிட்டு அவர்பேசும் வார்த்தைகளும்,சீவர்களுக்கு அவர் காட்சி கொடுக்கும் அவரது சப்தப்பிரமரூபமாகிய அவரது ஓர் வடிவமும், அவர் சீவர்களுக்குப் போகமோக்ஷமளித்தற்குக் கைக்கொண்டசாதனமும், அவர் சீவர்களாகிய பிரஜைகளை ஆளும்செங்கோலும் என்னும் இவைகளெல்லாம் மக்கள்பால் இரப்பிரந்து வாங்கிய இரவற்பொருள்களாய், அம்மட்டோ, அவைதாமும் தமது உறுப்புக்களுள் ஒன்றுக்கொன்றுமாறுபட்டுத் தப்புந்தாறுகளுமாய்க் கொள்ளற்பாலன அல்லாதபலபிடுங்கல்களாய்ப் பின்றைமக்களால் உருப்படியே சரியில்லாமற்போயிற்றென்றன்றோ பரமசிவனது அந்தரக்குடிவாழ்க்கைக்கு இத்தனை இழுபறியைக்கொண்டுவந்துவிட்டனர் அவ்விருவருமென்பது கேட்கவும்வேண்டுமோ? சைவசமயிகளே, இதில் யாம் சொல்வது குதர்க்கமென்பீர்களாயின் ஈண்டு யாம் உதகரித்துக்காட்டிய திருவிளையாடற்புராணமும் குதர்க்கந்தானோ? அது கூறியபடி அந்நாட்குலபூடணபாண்டியனை முன்னிட்டெழுந்த அப்பரமசிவவாக்கும்குதர்க்கந்தானோ? இனி அங்ஙனமன்று திருவிளையாடற்புராணம்கொள்ளற்பாலதன்று அப்பிரமாணமெனின், அதனைத்தந்து நின்ற முதனூல்களும் அப்பிரமாணந்தானோ? அவைதாமும் அப்பிரமாணமெனின் அவை முறையிட்டுநின்ற பரமசிவசற்பாவமும் (இருப்பும்) அப்பிரமாணந்தானோ? அதுவும் அப்பிரமாணந்தானெனின், பரமசிவனைக்கூறிய திருவாசகமும் அப்பிரமாணந்தானோ? அதுவும் அப்பிரமாணந்தானெனின், இவ்வேதாசலத்தது

திருவாசகஇரிவுரை அம்மம்ம!என்னபாடுபடாது!! எமது மத நூல்களெல்லாம் வேதமும் அதற்கனுசாரிகளாகிய வைதிகநூல் களுமே பிறிதில்லையாகவும்,

"வேதசாரமிதந்தந்த்ரம்"

"சித்தாந்தோவேதசாரத்வாத்"

என்று முழங்கும் சிவாகமமும் சாரரூபவேதமேயாகவும், நால் வர் திருமுறைகளும் வேதமேயாகவும் அவ்வேதத்துக்கு அழி கட்டாகப்படைஎடுத்துநின்ற இவ்வேதபாகியமோசநாசவேதா சலதிருவாசகஇரிவுரை சுழல்காற்றிற்பட்ட பஞ்சாய்ப்பறந்து போனபேரக்குத்தெரியாமல் கழிந்தொழிந்து விடுவதல்லது அத னது கதி மற்றுயாதாய் முடியுங்கொல்லோ!!இவ்வேதாசலத்தது இரிவுரைக்கு வந்ததுர்க்கதிக்கு அவதி இதைவிட இன்னும் யாம் சொல்லவாவேண்டும்!! இது பௌத்த, சமண், வாம, சர்வாகநூல் களுக்குமில்லாத நிரவதிகதுர்க்கதியோ! அன்றே!!

இக்கதியில் "எள்ளேன்காய்குது எண்ணைக்காக, எருப்புழு க்கை ஏன்காய்குது கூடக்கிடந்தகுற்றத்துக்காக" என்ற பழ மொழிப்படி வேதவிரோதமகாபாதிவேதாசலத்தோடு நிரப ராதி நவசக்தி முதலியார் கூடிய கூட்டுறவுக்கு யாம் மிக விசனிக் கின்றேம்.

ஆதலால் இந்நிக்ம்பாஹ்யவேதாசலஇரிவுரைக்கணிகமுந் தமது உட்கிடையை இனியேனும் நமது நவசக்தி முதலியார் உல கறிய வெளியிட்டுத் தமது பழைய ராட்டினப் பருத்திநூற்கத ராடை போலத் தமது வேதாகமப் பழைய ராட்டினத் திருவாச க ஞானநூற்கதராடையை வேதாசல மேனாட்டுப் பைலலோஜி இரிவுரைநூற் புத்தாடையால் புறம்பழிக்கவொட்டாது விலக்கித் தமதுவைதிகசைவப்பழைய நன்னூற்புலமையைக் கைக்கொண்டு

தமதுகாத்திரயடிக்கணீதினைய அரசழிவாகாமே நிலைநிறீஇநலம் பெறுவாராக.

இன்னும் பார்மின்கள் ! சைவசமயிகளே !!

அம்முதலியார் "ஆங்கிலங்கற்றாரும், தமிழ்பயின்றாரும், தத்துவஞானஆராய்ச்சி உடையாரும், இலக்கியப்புலவரும், இலக்கண அறிஞரும், செந்தமிழ்க்காதலுடையமாணாக்கரும், பிறரும் வாங்கிவாசித்துத்திருவாசகஇன்பத்தை நுகர்வாராக" என்று மதிப்புரையில் விதிவிதித்திருக்கின்றார். ஈண்டேயும் அம்முதலியாரது நன்மைப்பாங்கில்நிற்பேமாயக்கால் இவ்விதியைப் பரிசங்கியாவிதி யென்று கொள்கின்றோம். எதனால்? நுகர்வார் நுகருவது திருவாசகத்தையா ? அல்லது அதனை ஒட்டி அதற்கு உட்சத்துருவாய்நிற்கின்ற திருவாசகவேதாசலஇரிவுரையையா என்று ஆசங்கித்து அவற்றுள் இன்பமாவது மூலமாகிய திருவாசகமேயாகலின் அத்திருவாசகஇன்பத்தைநுகர்வாராக என்று விதித்துத் துன்பமாவது அவ்விரிவுரையாகலின் அதனை நுகராது காறி உமிழ்ந்துவிடுவாராக, வீசிஎறிந்து விடுவாராக என்று அதனைவிலக்கினர் அம்முதலியாரென அவ்விதிக்கு அப்பாங்கில் அப்பொருள் பெறப்படுதலினாலென்க. ஒரேசமயத்தில் ஓரிடத்ததாய் இரண்டு பொருள் வருங்கால் ஒன்றைக்கைக்கொண்டு மற்றொன்றை விலக்குதல்பற்றி யெழுந்தவிதி பரிசங்கியாவிதி யெனப்படும்.

ஈண்டுத் திருவாசகஇன்பத்தை நுகர்வாராக என்றதனால் மாங்கனியை நுகர்வாராக என்னும் விதியில் தோலைக்கொட்டையை நுகராதொழிவாராக என்றாற்போல வேதாசல இரிவுரைத்துன்பத்தையும் அதன்புறவிதழ்களில் வரும் வேதாகமஅவமானத்துன்பத்தையும் நுகராதொழிவாராக என்பது உற்றுணர்வார்க்கு இனிதுபோதருதலின் முதலியாரது அவ்விதி பரிசங்கியாவிதி என்ப

து பொருத்தமோ? அன்றோ? அங்ஙனமல்லாக்கால் உரையைச் சிற ப்பிக்கவந்தவர் திருவாசகவிரிவுரை இன்பத்தை நுகர்வாராக என்று வெளிப்படஎழுதியிருத்தல் வேண்டுமோ? அன்றோ?

இனி அவர்தம் மதிப்புரையின் முன்பின்வசனங்களால் அதனை இங்ஙனம் பரிசங்கியாவிதியென்று கொள்ளலாகாமெனின், "கெட்டதுங்கெட்டான் வடமன் சாதி கெடவில்லை" யென்றாற்போல அவர் மதிப்புரையில் முன்பின்னிடங்களில் எப்படி எழுதினாலும் மீமாம்சை நூலார்கொள்கைப்படி அவைசித்தவாக்கியங்களாய்உபசாரிகங்களாய் அப்பிரமாணங்களாயொழிய ஈண்டு அவர் கூறிய விதிவாக்கியமே வலியுடைத்தென்பது அவர் தமக்குங்கருத்தாகலின் அவர் விதி பரிசங்கியாவிதியென்பதில் ஐயமென்னையெனக், எனம்வ, அவரது முன் பின்வாக்கியங்களைப் பார்க்கினும் அவர்விதிவாக்கியம் பரிசங்கியாவிதியாய் வலியுடைத்தேயாக வேதாசல இரிவுரை துன்பமேயென அவரால் விலக்கப்பட்டதென்பது பொருந்தமேயாயிற்று.

அற்றேல் அஃதங்ஙனமன்று. உத்தரமீமாம்சை நூலார்கொள்கைப்படி விதிவாக்கியம்போலச் சித்தவாக்கியமும் பிரமாணந்தானெனின், நன்று சொன்னாய்; சித்தவாக்கியத்துள்ளும் பிரமாணமெனப்படுவது ஆப்தவாக்கியம் ஒன்றே ஏனைப் பிராந்தவஞ்சக உபயரூப அனாப்தவாக்கியமன்றாகலின், பிராந்தியினாலோ, வஞ்சனத்தினாலோ முதலியார் அங்ஙனங் கூறிய இரிவுரை அநுகூலசித்தவாக்கியங்கள் அப்பிரமாணமென்று முன் விவகாரத்தில் அவர்தாமும் ஒப்ப எம்மால் நிரூபிக்கப்பட்டொழிந்தமையின் அஃதாசங்கையாகாமை கடைப்பிடிக்க. ஆகலின் "நெஞ்சின் மிக்கது வாய்சோர்ந்துபுலப்படும்" என்றாற்போல வேதாசல இரிவுரை துன்பமென முதலியாரால் வியவிர்த்தி (விலக்கு)

செய்யப்படுவதாகக், களித்தான் தெளிந்ததுபோலவும் உறங்கினன் விழித்ததுபோலவும் அவர் தெளிந்து விழித்தாராய் அவ் இரிவுரையை விட்டுத் திருவாசகமூலமாத்திரமே இன்பமென அவரால் விதிக்கப்படுவதாய் அவ்விதி பரிசங்கியாவிதியாய் அவர்க்கு முடிந்தமை அவர்தம் புண்ணியவசமாகிய தலைவிதியே என்று யாம் பகிழ்கின்றோம்,

அற்றேல் அஃதங்ஙனமன்று; "இத்தகைய உரையை உதவிவரும் சுவாமிகளுக்கு எமதுவணக்கத்தைச் செலுத்துகிறோம்" என்று முதலியார் மதிப்புரையை உபசங்கார (முடிவு) ஞ்செய்தது எப்படிப்பொருந்துமெனின், நன்றுசொன்னாய், "துன்பமே உனக்கு வணக்கம். இன்பமே உனக்கு வணக்கம். ஜனனமே உனக்கு வணக்கம். மரணமே உனக்கு வணக்கம்." என்று வாசிட்டநூலார் கூறியபடி திருவாசகத்துக்கு மறுதலைக்கொள்கையாகிய துன்பமாய் இரிவுரைவந்து அத்திருவாசக இன்பத்துக்கு அதிசயத்தைத்தந்த அம்மட்டில் அது சபலமாய் இனி அது மேலுலகனைத்தையும்விட்டு நிசபலமாகியதுஎதை நோக்கி உத்துவாசனஞ்செய்யப்படுக என்பது முதலியாரது பரிசங்கியாவிதியின் பலமாகலின் பேயை உத்துவாசனஞ்செய்யும்பொழுது அதற்கோர் பலியும் வணக்கமுந் தந்து அதனைக் கழிப்பார்போலத் திருவாசகமேவதாசல இரிவுரையை உத்துவாசனஞ் செய்யும்பொழுது அதற்கு மதிப்புரைப்பலியும் வணக்கமும் தந்து அதனைக் கழித்தனர்மன் முதலியாரென்பது அவ் இரிவுரையாசிரியர்பாற்சென்று அவர் முடித்த அந்நமஸ்காரோபசம்மாரத்தின்கருத்தாகக்கொண்டு அதனை அப்பரிசங்கியாவிதிக்குமுரணாது அதனோடு ஏகவாக்கியதைபண்ணுவர் உய்த்துணர்வுவல்லவித்தகர்களென்பது.

இன்னும், அம்மட்டோ, சைவசமயிகளே! முதலியார்

தமது மதிப்புரையின் உபக்கிரமத்தில் (தொடக்கத்தில்) திருவாசகத்தில் தொடங்கி அதற்கேற்ப அதனது பரமோபசம்மாரத்திலும் (கடை முடிவிலும்)" திருவாசகத்துக்கு உருகாதார் ஒருவாசகத்துக்கு முருகார்" என்று அத்திருவாசகத்தையே துதித்துத் திருவாசகவேதாசல இரிவுரைப்பேச்சு நடுவில் வந்து நடுவில் கழிந்ததாயொழியத் தமது மதிப்புரைக்கு விடயமாய்நின்றது திருவாசகமூலமாத்திரமேயென உபக்கிரமோபசம்மாரநியாயத்தில் நின்று தமது உட்கிடையை உய்த்துணரவைத்தனரென்பதும் கடைப்பிடிக்க.

இனி "நெய்க்குடமுடைந்தது நாய்க்குவேட்டை" என்றாற்போல வேதாகமம்உடைந்தாலென், திருவாசகமெப்படியானாலென், மறைமலையடிகள் திருவாசகவிரிவுரையென ஒன்றுவந்ததே நமக்கு வேட்டையென்றுஅதன் உள்ளீடுநோக்காதவெள்ளறிவினால் வெறுமனே திருவாசகவிரிவுரை என்னும்அப்பெயர்மாத்திரகௌரவத்தில் மோகித்து அதனைச்சுமந்துதிரிவாராகிய நிரபராதி திருவரங்கடிகளை நாம் நொந்துகொள்வதன்கணுளதாவதோர் பயன் யாது? மற்று அவ்வுரையின் அழுக்காகிய உள்ளீடு நோக்கியும் அதன்கணுவர்ப்புறாது அவ்வரங்கடிகள் அதனைச்சுமந்தாரண்டானால் "மறைகணிந்தனை சைவநிந்தனை பொறுமனமு"மென்னும் நந்திகேசுரரது சட்டப்படி அவ்வரக்கடிகளுக்குக் கடமைப்படுவது நரகுலகன்றித் தமிழுலகன்று. வேதாகமமென்னும் சர்வபுருஷார்த்தகற்பகதருவின் வேரில் வெந்நீர்கொட்டுவித்துத் தமிழுலகில் எத்தனைபேரை வஞ்சித்து வேதாகமநிந்தகர்களாக்கி நரகுருவத்தென்றிசைநெட்டாளுக்கு யார் குடியேற்றுகின்றார்களோ அவர்களுக்குக் கப்பணமுந்தந்து கடமைப்படுவது அந்நரகுருவநெட்டாலன்றி இவ்வுபயவேதத்தமிழுலகு கடமைப்படுதற்குக் கார

ணம் எட்டுணையுமில்லையே என்பதை முதலியார் ஊகிக்கலாகாதா?

ஆயினும் வேதாசல இரிவுரையை நம்பிமோசம்போனவர்களாகிய அவ்வேததர்ம நிந்தகர்களைத் தமிழுலகை விட்டுக்களைந்து நரகுலகுக்குக் குடியேற்றுமதனால் தனக்குப் பூபாரந்தீர்க்கப்பிறந்தபுபல்வண்ணனாய்த் தலைச்சுமை குறைத்த உதவியாளர் அவ்வரங்கடிகளாதலின் அத்திறத்துதவியின்வைத்துத் தமிழுலகம் அவர்க்குக் கடமைப்படுதல் வேண்டுமென்னும் நியாயநெறியால் முதலியார் அவர்க்குக்கூறிய பலச்சுருதி (பலத்தைக்கூறிய வாக்கியப்) சால்புடைத்தேயாயிற்று.

இன்னும் முதலியார் கூறிய அப்பலச்சுருதியில் "காலநிலை உன்னி ஸ்ரீ-ய-ஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்களைக்கொண்டு விரிவுரை எழுதுவித்து" என்று திருவரங்கடிகளைக்கூறிய விநயத்தால் அவர்தாமே எழுதியவாறு 'தமிழ்வளம் அருகியுள்ள' இக்கெட்ட காலநிலையை உன்னி உரைவளம் அருகியுள்ள இக்கெட்டவிரிவுரை சூடிக்கேற்ற முடியாய்ப் பொருத்தமாய்ப் பழுதுடைத்தன்றுதான் என்பதையும், மற்றுத்திருவாசகத்தமிழ்மறைநூனிலையையும், அதனது பரமார்த்தப் பொருணிலையையும், பரமசிவாநுபவப்பயனிலையையும் உன்னிப் பரமார்த்தஉரைவளமருகியுள்ள அக்கெட்டவிரிவுரை திருவாசகச்சிவச்சாடிக்கொவ்வாத இரிவுரை அசிவமுடியாய்ப் பொருத்தமிலதாய்ப் பழுதுடைத்தேயிறிதில்லை என்பதையும் குறிப்பினுட்குறிப்பாக உய்த்துணரவைத்தனர் அந்நவசக்திமுதலியார் என்பதாயிற்று.

ஆதலால் முதலியாரது (ironical) அர்த்தாந்தரபலச்சுருதியினால் ஏமாந்துபோய் இன்னும் வேதாகமநிந்தைக்கு ஆயுதமெடுத்துக்கொடுத்த மாபாதகத்துக்கு இரையாய் மீளாநரகிற்காளாகாது திருவாசகத்ததகவல் நான்கோடு அவ்விரிவுரைப்பாபக்கடையைக் கட்டி அதனைத் திருச்சதகம் முதலாகக்கொண்டுய்க்.

க்காது தம்முயிர்க்கு ஈனந்தருமாறு அத்திருவாசகவுரையினை அநுதாபசிந்தையால் எச்சரிக்கின்றேம்.

இனி முதலியார் இளந்த ஆங்கிலங்கற்றவர்களே! வேதாசலத் திருவாசகவிரிவுரையில் ஆங்கிலவிரோதங்கள் பல. தமிழ் பயின்றோர்களே! அதில் தமிழ்விரோதங்கள் பல. தத்துவஞான ஆராய்ச்சியுடையீரே! அதில் தத்துவஞானவிரோதங்கள்பல. இலக்கியப்புலவர்களே! அதில் இலக்கியவிரோதங்கள் பல. இலக்கண அறிஞர்களே! அதில் இலக்கணவிரோதங்கள் பல. செந்தமிழ்க் காதலுடைய மாணாக்கர்களே! அதில் செந்தமிழ்க்கலாங்கள் பல. பிறர்களே! அதில் பிறகலாங்களும் பல. அவையெல்லாம் எமது இனிவரும் விஸ்தாரகண்டனங்களில் வெளிகொடுவந்து சேதிக்கப்படுவனவாம். இவ்வெச்சரிக்கைப்பத்திரம் திருச்சங்கர்கம்பெனிநோட்டீசைக் கண்டித்த சாமயிகசுருக்கண்டனமாதலால் அவற்றை ஈண்டு விரிவஞ்சிவிடுத்தனம்.

இனித் திருவாசகவிரிவுரையென்பது தனது பெயர்க்கட— கபாடத்தால் பொலிவுபடைந்து, அக்கபாடத்தைத் திறந்து உள்ளே பார்த்தால் சிவஞானத்தைக் கொன்று அவஞானம் தரும் அபார்த்தங்களும், அவாச்சியங்களும், அபசித்தாந்தங்களுமாகிய விஷமருந்துகள் பொதிந்த விஷக்களஞ்சியமாதல்போல அவ்விஷக்களஞ்சியத்தைப் "பூசைக்குரியது" என்றும் "தெய்வஅருள்நூல்" என்றும் தன்கட்கொள்ளப்போய்த் திருச்சங்கர்கம்பெனிச் செந்தமிழ்க்களஞ்சியமும் தன்னை நோக்குவார்க்கு கொந்தமிழ் விஷக்களஞ்சியமாய் முடிந்தமுடிவைநோக்கி யாம் மிக விசனிக்கின்றேம்.

"அரிமந்திரப்புகுந்தாலானைமருப்பும்
பெருகொளிமுத்தும்பெறலாம்—நரிமுழையில்
வாலுஞ்சிறியமயிரெலும்புங்கர்த்தபத்தின்
றோலுமல்லால்வேறுமுண்டோசொல்." என்னும்

நீதிவெண்பாவை உற்றுநோக்கித் திருச்சங்கர்கம்பெனி தனது செந்தமிழ்க்களஞ்சியத்தை அத்திபுச்சமாகிய சிங்கந்தங்கியகுகைக்கிடமாக்காது அதிநீசமாகிய நரிமுளைக்கிடமாக்கவாவேண்டும்! அம்மம்ம! பாபம்!! பூசைக்குரியநூல்! தெய்வ அருள்நூல் விலைக்கு உண்டா என்று கேட்டுக்கலிக்கோக் கட்டடத்துக்கு ரூபா 5-ம் பட்டுக்கட்டடத்துக்கு ரூபா 6-ம் விலைகொடுப்பார்க்குத் திருவாசகமோசங்களாகிய வாக்குகளும், வேதாகமநாசங்களாகிய சிறியமயிரெலும்புகளும், வைதிகசைவ ஆபாசங்களாகிய கர்த்தபத்தின்றோல்களும் மலிந்த திருவாசகவிரிவுரை என்னும் நரிமுளையா 'பூசைக்குரிய நூல்" "தெய்வ அருள் நூ"லாய் விலைப் பொருளாதல்வேண்டும்!!

வேதாகமரகசியப்பொருள்களாகிய ஆனைமருப்புக்களும், செந்தமிழ்த்தெய்வத்திருமறை அனுபவப்பொருள்களாகிய பெருகொளியமுத்தங்களும் பெறநின்றதிருவாசகச்செவ்வுரையொன்றை வேதாகமசந்சம்பிரதாயிகளாகிய சிவஞானச்செல்வர்களைக்கொண்டு எழுதுவித்துப் "பூசைக்குரியநூல்" "தெய்வ அருள் நூல்" வெளிவந்துவிட்டதென்று நாட்டவர்புகழ நோட்டிஸ் விடுத்துப் பத்துரூபா பன்னிரண்டுரூபா என்று இரட்டிவிலைவைத்து அறநெறியிற்பொருளீட்டி இத்திருச்சங்கர்கம்பெனி தனது புஸ்தகவியாபாரவாழ்க்கையைச் சிவமலிசெல்வத் தவமலிவாழ்க்கையாகக்கொண்டுய்க்கலாகாதா?

அந்தோ! இத்திருச்சங்கர்கம்பெனி இந்நாட்சற்சம்பிரதாயசைவசமயிகளுந் தனது கண்ணுக்கு நிறைந்த வித்துவான்களில்லையென்றால் நாயன்செய்த 'பூசைக்குரியநூல்' குறுன் என்று பிடித்த கடைப்பிடிவிடாது அவ்வியபிசாரிகளாகிய முகம்மதியர்கையிலேனும் ஜிகோவதேவன்செய்த "தெய்வ அருள் நூல்" பைபிள் என்று பிடித்த கடைப்பிடி விடாது அவ்வியபிசாரிகளாகிய

ஜைஜேசோவர்கள் கையிலேனும் திருவாசகத்தை ஒப்பித்து அதற்குச் செவ்வுரை கேட்டிருந்தால் இத்துணை மோசநாச ஆபாசமாகாத எவ்வுரையேனுமொன்று அவருள் ஒருவரால் இக்கம்பெணிக்குக் கிடைத்திருக்கலாமே. பகடநியர் ஜேகோவர்களோ தங்கள் மதநூல் கடவுளை வித்தாகக்கொண்டுவந்த ஆதிநூலாகிய முதல்வனூலென்னும் முதற்கொள்கையர்களாதலால் அவர்கள் வந்த சம்பிரதாயம் வித்துள்ளசம்பிரதாயமாம். இவ்வேதாசலமோ தனது மதநூல் அநாதியமலனாகிய கடவுளை வித்தாகக்கொண்டுவந்த ஆதிநூலென்னும் முதல்வனூலாகாது அநாதிசமலர்களாகிய மக்களை வித்தாகக்கொண்டு இடைத்தட்டில்வந்த இடைநூலென்னும் இடைக்கொள்கையராதலால் இவர்வந்தசம்பிரதாயம் வித்தில்லாச்சம்பிரதாயமாம்.

“வித்தில்லாச்சம்பிரதாயம், மேலுமில்லைகீழுமில்லை.” அதுபோல இவ்வித்தில்லாச்சம்பிரதாயவேதாசலத்துக்குப் பரப்பிரமபரமசிவதரிசனஸ்பரிசன ஆலிங்கனசுத்தாத்வைதநிரதிசயசுகபரமபலபோதகமாய்முதனூலாகியவேதாகமமென்றமேலுமில்லை. அதற்கு எத்துணையோதூரதூரத்துப்பாஷாக்ஷரக்கருவிநூலாகிய பிங்கலந்தைதிவாகரம்என்றகீழுமில்லை. கேவலம் விசாத்தியநூலாகியபைலலோஜிஎன்ற கீழுக்குக்கீழுமில்லை. இவருக்கு மேல்கீழாய்க் கீழ்மேலாய் எல்லாம் தலைகீழ்ப்பாடமாகிய ஒரேபாடந்தான். வேதாகமமாகிய பரமார்த்தமுதனூலை அகண்டார்த்தபோதகத்தைச் சுபசோபனத்தைச சிவபாவனத்தை அம்மம்ம! பாபம்!! பிங்கலந்தை திவாகரம் என்னும் கருவிநூலால் அளக்கலாமோ! அதினுங்கீழாகிய பைலலோஜியால் அளக்கமுடியுமோ! என்னும் தாரதம்மிய உணர்ச்சி இவ்வித்தில்லாச்சம்பிரதாயவேதாசலத்துக்கு எங்ஙனம்

கிடைப்பதாகும். அங்ஙனமாம்போது "எவன் ஸர்வஞ்ஞன் ஸர்வவித் எவனுக்கு ஞானமயம் தபசு?" 'அவன்பால் தேபானன்பால் மூன்று வேதங்கள் பிறந்தன, ருக்வேதம், யசுர்வேதம், ஸாமவேதமென' என்று வேதமும்,

"சிருஷ்டிகாலத்திலே புருஷார்த்தப்பிரசித்தியின்பொருட்டு விமலமாகிய ஞானத்தை மகேசானர் செய்கின்றார்" என்று சிவாகமமும்,

கூறியவாறு பரமசிவனது காருண்ணிய அவசரங்கள் பலவற்றுள் அவரது ஞானமயதபோநிஷ்டஅவசரத்திலிருந்தே வேதாகமங்கள் வெளிவந்தன என்னும் அவற்றது மகிமை இவ்வித்தில்லாச்சம்பிரதாயர்க்கு எங்ஙனம் தெரிவதாகும்! இவரது சிவாகர்த்திருகசீவகர்த்திருகவேதாகம அஞ்ஞானபுஷ்கல அநாதவாதம் மகமதியர்கள் ஜைகோவர்களுள்ளிட்ட ஆஸ்திகர்களுக்கெல்லாம் 'நகைப்புக்கிடமாயிற்றே! அன்றோ!! இங்ஙனம் நகைப்புக்கிடமாகிய விபரீதவாதவேதாசலத்தை வேதசாரதிருவாசகத்துக்கு இருந்திருந்துதேடிப்பிடித்து உரைகாணச்செய்த திருச்சங்கர்கம்பெனியாரது புத்தியின்வைபவத்தை யாம் என்னென்று சொல்வோம்!

ஓ! திருச்சங்கர்கம்பெனியார்களே! நம்மேல் உங்களுக்கு முனிவு உண்டாகலாம். அம்முனிவு

"மிக்கவேதமெய்ந்நூல் சொன்னவனே" என்றும்,

" கேவேடராகிக்கெளிறதுபடுத்து
மாவேட்டாகியவாகமம்வாங்கியும்
மற்றவைதம்மை மகேந்திரத்திருந்
துற்றவைம்முகங்களாற்பணித்தருளியும்" என்றும்,

திருவாசகமருளிச்செய்த மாணிக்கவாசகரைச் சாருமதல்லது நம்மைச் சாரமாட்டாது, அது மற்று அவரைச்சார்ந்துதான் அவர்தம்மை என்செயவல்லது? விட்டவரைச் சாருமதல்லது. ஆதலால், அன்பர்களாகிய கம்பெனியார்களே, சுட்டிய இரண்டு திருவாசகவசனங்களையும் ஒப்புகின்றீர்களா? அல்லது அவற்றை

மறுத்து நூன்மாறுபாடு பொருண்மாறுபாடு செய்து அவற்ருேடு பொருதுநிற்கும் வேதாசல இரிவுரையை ஒப்புகின்றீர்களா ?

நீங்கள் திருமறையென்று ஒப்புக்கொண்ட திருவாசகவசனங் களை ஒப்புகில் அவ்வேதாசல இரிவுரையை அடியோடு தள்ளிவி டுங்கள். அது உங்கள் திருவாசகத்துக்கு உட்சத்துருவாதலால் அதனை எரிக்கிரையாக்கிவிடுங்கள். அல்லது உங்கள் பொரு ளைச் செலவிட்ட வேதாசல இரிவுரையை ஒப்புகில் உங்கள் நோட் டீசில் கண்ட 'திருவாசகத்திருமறை' என்னும் பெயரைத் தள்ளி விடுங்கள். திருவாசகம் பொய்மறை யென்பதைச் சொல்லிவிடுங் கள். அதனைத் திருமறையென்ற உங்கள் நோட்டீசே தவறென் பதை ஒப்பிவிடுங்கள்.

இனிச், சைவசமயிகளே, திருச்சங்கர்கம்பெனிநோட்டீசில் திருவாசக வேதாசலஇரிவுரையைப் "பூசைக்குரிய நூல்" என்றும் "தெய்வ அருள் நூல்" என்றும் வந்த இரண்டு சிறகுகளுக்கும் சொரூபம் யாது ? அவற்றிற்கு யாது பொருள் கொண்டீர்கள் ?

யாம் மேலே கூறிப்போந்த நியாயத்தால் "பூசைக்குரிய நூ" லென்பதற்கு நாணின்மை என்பதும் "தெய்வ அருள் நூல்" என் பதற்கு அச்சமின்மை என்பதும் சொரூபம் என்று கொள்ளத் தக்கதோ ! அன்ருே !! திருவாசகச்செந்தமிழ்த்திருமறையென் னும் பூசைக்குரிய நூலுக்கு முழுமாருயெழுந்த இரிவுரை நூலைப் பூசைக்குரிய நூலெனக் கூறலாமா என்று நாணுது அதனை அங் ஙனங்கூறியமையால் அக்கூற்று நாணின்மைபற்றி யெழுந்ததென் று கொள்ளற்பாலதோ ! அன்ருே !! ஆதலால் அதனது சொரூ பம் நாணின்மையோ ! அன்ருே !! திருவாசகச்செந்தமிழ்த்திரு மறையென்னும் தெய்வ அருள் நூலுக்கு முழுமாருயெழுந்த இ ரிவுரை நூலைத் தெய்வ அருள்நூலெனக் கூறலாமா என்று அஞ் சாது அதனை அங்ஙனங் கூறியமையால் அக்கூற்று அச்சமின்மை பற்றி யெழுந்ததென்று கொள்ளற்பாலதோ ! அன்ருே !! ஆத லால் அதனது சொரூபம் அச்சமின்மையோ ! அன்ருே !!

இனி அவ் இரிவுரை " பூசைக்குறியநூ " லென்றதற்குப் பத்திரபுஷ்பபலதோயபூசைக்குறிய நூலென்று பொருள் கொண்

டீர்களா ? அல்லது மாற்றுப்பூசைக்குரிய நூலென்று பொருள் கொண்டீர்களா ?

அவ் இரிவுரையைத் " தெய்வ அருள் நூல் " என்றதற்கு உள்ளபடியே தெய்வ அருள் நூலென்று பொருள் கொண்டீர்களா? அல்லது அதில் முதற்குறில் நீண்ட "தேய்வ அருள் நூ" லென்று பொருள் கொண்டீர்களா ?

முறையே நாணின்மை அச்சமின்மை என்னும் அவ்இரண்டுசிறகுகளையும் கீழ்விஷயந்தொங்கக் கட்டிய நடுவுடலையும் படைத்துவந்த திருவாசகஉரைநோட்டிசினது சொரூபம் யாது ? அதற்கு யாது பொருள் கொண்டீர்கள் ? அது விண்ணிற் பறந்துதிவதனல் வரும் அதனது ஏதப்பாட்டை நோக்குங்கால் சைவசமயிகளுள் அதமமத்தியம அதிகாரிகளாகிய பாலர்களது வேதாகம பாரம்மியம் திருவாசகதத்துவம் வைதிகசைவோத்கர்ஷம் என்னும் முத்திறத்து உண்மைஞானத்தைக் கொன்று அவர்களைக் கோட்படுக்கவந்த ஏதப்பாடுபற்றியெழுந்ததென்று அது கொள்ளற்பாலதோ ! அன்றோ !! ஆதலால் அதனது சொரூபம் தன் கட்பட்ட உயிர்களைக் கொன்று கோட்படுக்கும் வல்லூற்றினது சொரூபமோ ! அன்றோ !! ஆதலால் அது ரூபகாலங்காரத்தால் வல்லூறோ ! அன்றோ !!

இனி— "செந்தமிழ்க்களஞ்சியம் தொகுதி 1.
திருவாசக விரிவுரை முதற்பாகம் " என்னும்

அந்நோட்டீசில் "முதற்பாகம்" என்பதற்குச், சைவசமயிகளே, யாது பொருள் கொண்டீர்கள் ? திருவாசகம் என்னும் பாற்கடலைச் சற்சம்பிரதாயிகளாகிய சுரரும் அசற்சம்பிரதாயிகளாகிய அசுரரும் கடையப்புக்ககாலையில் அவர்களுட் சுரர்களுக்குப் போக்கியமாய் அவர் தம்மை அமரர்களாக வைத்து வாழ்விக்கப் பிந்திவந்த அமிர்தமாகிய சொரூபமுதன்மைப்பாகம் என்னும் முதற்பாகம் என்று பொருள் கொண்டீர்களா ? அல்லது அவ்விருதிறத்தாரையும் ஓட்டெடுப்பித்து அவர் தம் உயிரைக் கவர முந்திவந்த ஆலாகலமென்னும் காலமுதன்மைத்தாகிய முதற்பாகம் என்றுபொருள் கொண்டீர்களா ?

ஈண்டு இதுகாறுங் கூறியவாறு முறையே நாணின்மை அச்சமின்மை என்றும் அவ் இரண்டு சிறகுகளையும் நடுவுடலையும் படைத்த திருச்சங்கர்கம்பெனித் திருவாசகவிரிவுரை நோட்டீஸ் என்னும் வல்லூற்றுப் பறவையால் சைவசமயிகளுள் மத்தியம அதமாதிகாரிகளாகிய பாலர்கள் உயிர் கோட்படாது அவர்களைப் பாதுகாத்தற்பொருட்டும், இஞ்ஞான்று யாம் கேள்வியுறுமாறு எமது சற்சம்பிரதாயசைவசமயிகள் பெரும்பாலார் சேர்ந்த திருச்சங்கர் கம்பெனி வேதாசலஇரிவுரை விஷங்கலந்த சோறு, சேறு கலந்த பாலே பிறிதில்லையென அதனது ஏதப்பாட்டை இனியேனும் தெளிதரற்பொருட்டும், அங்நோட்டீஸ் வல்லூற்றுப் பறவையை இருசிறகும் நடுவுடலுங் கொய்து மண்ணில் விழுத்தியதோர் அத்திரமாகவும், திருச்சங்கர்கம்பெனிக்கு அவ் இரிவுரை நரிமுழையை அகற்றி அதனைப் பாவனஞ்செய்வதோர் பஞ்சகௌவியமாகவும், எமது பரமசிவமூலகவேதாகமோக்தவைதிகசைவநன்மரபிற்கு அதனை மறைத்திட்ட மாயைத்திரையை நீக்கி அதனை விளக்குவதோர் ஞானதீபமாகவும், எமது செந்தமிழ்நன்மொழிச் சுந்தரமங்கைக்குச் சோரம்போகவிருந்த திருமுறைப்பதக்கத்திருவாசகநடுநாயகமணியைக் களவு கண்டுபிடித்தெடுத்துக் கொடுத்து அவட்கு வாய்த்ததோர் அருந்துணை உள்வாகவும் இவ்வெச்சரிக்கைப் பத்திரத்தை யாம் ஈண்டு வெளியிட்டாமென்பது.

ஆதலால், சைவசமயிகளே, திருவாசகவேதாசலஇரிவுரை செந்தமிழ்த்தெய்வத்திருமறையாகிய திருவாசகத்தைக் குடிகெடுத்து மோசம் பண்ணச்செய்த மோசஉரையாய், அதன் ஆசிரியர் மாணிக்கவாசகர் தமது அத்திருவாசகத்தாலுச்சிமேற்கொண்டு மெச்சிய வேதாகமத்தை நாசம் பண்ணச்செய்த நாச உரையாய், அத்திருவாசகமும் வேதாகமமும் சம்மதித்த வைதிகசைவசித்தாந்தத்தைச் சைவசமயிகளுக்கு உள்ளபடியாகவொட்டாது திரிவுபடுத்தவந்த ஆபாச உரையாய், இம்முத்திறத்து மோசநாசஆபாசஉரையென்பதைக் கடைப்பிடியுங்கள்.

ஆதலால் அதனைக் கண்ணுற் காணுதீர்கள்! கையாற் றீண்டாதீர்கள்! செவியாற் கேளாதீர்கள்! மனசால் நினைக்காதீர்கள். எச்சரிக்கை! எச்சரிக்கை!! ஏமாந்துபோகாதீர்கள்! ஏமாந்துபோகாதீர்கள்!!

☞ விசேடம்

இன்னும், சைவசமயிகளே! குறித்த திருவாசகநோட்டீசில் கண்டிக்கற்பாலனவாகிய கூறுகள் பல உள. அவற்றைப் பல்லவ தல்லஜகுற்பானற்பஜற்பனபீதியால் விடுத்தனம். இனி இவ்வேதாசலம் திருவாசகத்துக்கு இரிவுரை செய்யவந்தவர் வேதாகம மட்டிலொழியாது, தோளிலிருந்து செவியைக் கடிப்பாராய்ச் செந்தமிழ்த்தெய்வத்திருமுறைகளுளொன்றாகிய திருமந்திரத்துட்புகுந்து அதனது அநுபவப்பொருண்மரபுகளை முன்பின்முறைபிறழாது நிரல்படவைத்து நோக்காது தமது நூதனகற்பனவிராத்தியக் கொள்கைக்குப் பொருந்தாத மந்திரங்களையெல்லாம் இடையில் சேர்க்கப்பட்டனவென்று இன்னனபலவாறு அத்திருமந்திரத்தைக் கெடுக்கத்துணிந்த பரிசுகேடுகள் சகிக்கற்பாலனவன்று. இன்னும் சிலநாளில் "திருமூலநாயனர் என ஒருவர் திருமந்திரமென ஒரு நூலைச்செய்தனரல்லர். அதனை இடையிலுள்ளார் பலர் பாடித் திருமூலநாயனர் செய்தனரென முகமனுரையாய் அதனை உயர்த்துவழங்குவாராயின"ரென்று இம்மறைமலையடிகள் எழுதினும் எழுதுவர். வேதாகமங்களையே கடவுள் வாக்கன்று அவை மக்கள்மொழியென்று இக்கோலத்தில் கொண்டுவந்துவிட்டவர்க்கு அவ்வேதாகமம் வைத்தகுடி தான் என்று தன்னைக்கொள்ளும் திருமந்திரம் எம்மாத்திரமாகும்!! ஆதலால் திருமந்திரத்தைத் திருமூலநாயனர் செய்தனரல்லர். இடைப்பட்டார் செய்தனரென்று படித்தற்கு இவர்க்கு நேரமா செல்லும்!! மலைவிழுங்கிமாப்பிள்ளைக்குக் கதவு அப்பளம்மா! அன்றோ!!

இங்ஙனம் இவர்கையில் திருமந்திரம் அகப்பட்டுக்கொண்டு படும்பாடு ஒருபக்கமிருக்க, இதனிடையே பஞ்சாக்கரம் படும்பாடு மற்றொருபக்கமிருக்க, வடமொழியும் தென்மொழியும் ஆரியர்களும் தமிழர்களும் படும்பாடு இன்னொருபக்கமிருக்க,

"இஃதிங்ஙனமாகவும், ஈண்டுக் குறிப்பிட்டது திருநீலகண்டயாழ்ப்பாணரேயாம் என்பது படத் "திருவியமகத்தினுள்ளுந்திருநீலகண்டப் பாணர்க் கருளிய திறமும் போற்றி", என்று பெரியபுராணத்துட் சொல்லப்பட்டது சிறிதும் பொருத்தமாகக்காணப்படவில்லை. இறைவன் பாணபத்திரர்பொருட்டு இசைபாடினமை

யே பண்டைநூல்களிற் காணப்படுகிறதன்றித், திருஞானசம்பந்தப்பெருமானோடு உடனிருந்த திருநீலகண்டயாழ்ப்பாணர்க்காக அங்ஙனஞ்செய்தாரென்பது யாண்டுங் காணப்படவில்லை" என்று

அஹோ! ஆச்சரியம்!! இம்மறைமலையடிகள் பெரியபுராணத்தது குடியிருப்புக்கும் கேடுசூழ்வாராய் அதற்குப் பொருத்தமின்மையைச் சாதித்தனர். அந்தோ! இவர் தம் வினைவலி இருந்தபடி என்னை!! இவர் அதன்மேலும் "ஓய், வந்து வந்து பெரியபுராணத்திலுமா பாய்ந்துவிட்டீர்"!! என்று தம்மைக் கடாவுவார்க்கு நேர்விடை கூறவாற்றாராய்ச் "சேக்கிழாரைப்பற்றிப் பேரளவாய்க்கூட யாம் ஏதும் எடுத்து மொழிந்திலேம்" என்று தொடர்பில்லாமல் ஓர் விடை இறுத்து அதன்மேலும் ஆண்டைக்கியைபில்லன பலபல மொழிவாராயினர். இவர் அவ்வளவில் சேக்கிழாரைச்சார்ஜபண்ணாது அவரை மன்னித்து விட்டனர்!!இனிப் பெரியபுராணத்தையன்றிச் சேக்கிழாரை இவர் எப்படி அறிந்து எப்படி மன்னிக்கத்துணிந்தனரோ தெரிகின்றிலம்! அவரை மன்னிக்கும்பொழுது அவரோடு அவரது பெரியபுராணத்தையும் மன்னித்தற்கு இவர் மனம் பொருந்தாமே அதற்கு அவயவஹூறு செய்தற்கு அது இவர்க்குச் செய்தகொடுமை என்னைகொல்லோ தெரிகின்றிலம்!!

பெரியபுராணத்தில் திருமலைச்சிறப்பு, திருநாட்டுச்சிறப்பு, திருவாரூர்ச்சிறப்பு, அதனுள் மநுநீதிகண்டசோழர் வரலாறு, திருக்கூட்டச்சிறப்பு, இவைகளெல்லாம் " கூறியது கூறல் " "மிகைப்படக்கூறல்", "மற்றொன்று விரித்தல்" என்னுங் குற்றங்களுட்பட்டனவென அவற்றிற்குக் குற்றப்பத்திரிகை வாசித்தனர்! இவைகளெல்லாம் சேக்கிழார் செய்தனவல்லவாம்! அவை பின்றைக் காலத்தாரால் எழுதிச்சேர்க்கப்பட்டனவாம்! இதற்குப் பிரமாணம் என்னென்பார்க்கு மேகத்தின்சாயை, மணலில் தைலம், ஆகாயத்தில் வில்லு, கட்டையிற் கள்ளன், கானலிற் சலம் என்னும் இக்கோடியனவாக அவர் காட்டும் அவர்தமது ஸ்வகபோலகற்பனகுயுக்திகளே அதற்குப் பிரமாணமாம். அதுவன்றிச் சத்துக்கள் கொள்ளும் பிரமாணலேசம் ஒரு சிறிதுமில்லை. இங்ஙனம் தம் தோளில் தாம் ஏறி விளையாடுவார்க்குச் "சபாஷ்" சொல்லுதற்கு ஓர் கம்பெனியும் "பலே" சொல்லுதற்கு ஓர் தமி

மூலகமும் அகப்பட்டால் ஏதிலராகிய அவர் தம்மை யாம் குற்றம் சொல்வதில் என்னைமன்னோ பயனுளது !!

கடவுள் படைத்த பழைய சூரியனும் சந்திரனும் வேறு, அவற்றோடு இடைப்பட்டார் பல சேர்க்கைகளைச்சேர்த்து அவற்றைப் பழுதுபடுத்தினர். அதனால் பிரகிருத சூரியசந்திரர்கள் வேறு என்று ஒருவன் மூக்கறுத்துக்கொண்டு முக்காலும் சத்தியம்பண்ணுவதை நம்பினால் எமது பெரியபுராணத்தில் இவ்வேதாசலமறைமலையடிகள் சொல்வதை நமது செந்தமிழ்த்தெய்வ உலகம் நம்பலாம்.

இவையெல்லாம் யாம் மேலே குறித்தவாறு இம்மறைமலையடிகளது வித்தில்லாச்சம்பிரதாயத்தின் வழிவந்த விபரீதகோலாகலங்களே பிறிதில்லையென்பதை அவரை ஊக்கிவிட்டு நின்ற திருச்சங்கர்கம்பெனிச் செந்தமிழ்க்களஞ்சியம் இனியேனும் உணரக்கடவது.

வேதாகமமும் தமிழ்வேதமும் திருமுறைகளும் என இவை எவையும் தமக்குச் சரிப்படாது அரோசகங்களாக அவற்றைக் கூட்டியும் குறைத்தும் மாற்றியும் திருத்திப் புது உலகு படைக்கவந்த இவ்விசுவாமித்திரமறைமலையடிகள்விபரீதசாமர்த்தியத்தை மெய்ச்சி

"வித்தில்லாச்சம்பிரதாயம் மேலுமில்லை கீழுமில்லை" என ஓர் மத்தியமபரிமாணகண்டனமும்,

"வித்தில்லாச்சம்பிரதாயவேதாசலப்பிரலாபப்பிரவிலாபனம்"

என மற்றோர் மகற்பரிமாணகண்டனமும் இனி வெளிவருவனவாம்.

அவைதம்மையும் தமிழுலகம் கண்டு நனிமகிழ்வதாக.

இங்ஙனம்

விருத்தஸாலாபிஜ்ஞாத

ஸ்ரீஜ்ஞானசம்பந்தப்பராசக்தி.